775

# ஜகன் மோகினி

ஏவிளம்பி ௵ ஆனி மீ 1—7—57 25 நயா பைசா

## கலை பேசுகிறது

மலர் 34. இதழ் 7.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
16 NOV 1957
MADRAS





# ஜகன்மோகினி



ஐயுணர்வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு. —திருவள்ளுவர்

ஜகன்மோ கினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி! மனத்தைச் சார்ந்து.
—வீரராகவ கவி

ஜுலை 1957. மலர் 34, இதழ் 7. ஏவிளம்பி ௵ ஆனி ௴

பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| இனியேனும் பேச்சை விட்டுச் செயல் உண்டா? —V.K. பார்த்தசாரதிஐயங்கார் | 1 |
| காளிதாஸர் கனவு —K. S. ராமஸ்வாமி சாஸ்திரி | 5 |
| மஹானின் மறைவு | 8 |
| பகவத்கீதைக் குறிப்புகள் —ராஜாஜி | 9 |
| எங்களது இன்பச் செலவு —T. S. ராஜகோபாலன் | 11 |
| மனித மிருகம் —புஜலா | 17 |
| ஹிந்து சட்ட மாறுதல்கள் —P.M. ஸ்ரீநிவாஸ ஐயங்கார் | 21 |
| வை.மு. ஸ்ரீபின்தீபஸ்தம்பம் —வை.மு.விஜயலக்ஷ்மி | 225-240 |
| கலைபேசுகிறது சாலு நிலுபுரா —சாரக்ராகி | (ராப்பர் பக்கம் 2) |


கலை பேசுகிறது — சாரக்கிராகி

## சாலு நிலுபுரா

கலைச்செல்வத்திற்கு சிகரஸ்தானம் பெற்றுள்ளது நம் பாரத நாடு. எண்ணற்ற கலைகளில் சங்கீத கலையினால் மக்கள் அடைந்துள்ள லாபமும், படிப்பினையும் ஒன்று இரண்டல்ல. வெகு வருடங்களுக்கு முன்பு நடந்துவிட்ட விஷயமாயினும் அதை நினைத்துப் பார்க்கும்போது இப்போது நடப்பதுபோலவே உணர்ச்சி தோன்றுகிறது.

சுமார் 30 வருடங்களுக்கு முன்பு எழும்பூரிலுள்ள ஜகன்னாத பக்த சபையில் நடந்த ஒரு ரசமான துணுக்கை இங்கு விவரிக்கின்றேன்.

அன்று பங்களூர் நாகரத்னம்மாளின் கச்சேரி. பழங்காலத்து வித்வான்கள்—வித்வாம்சனிகள் சங்கீதத்தைக் கையாண்டு வந்த பாணியே அலாதி. ராகப்ரஸ்தாரம், ஸ்வரப்ரஸ்தாரம்,

[தொடர்ச்சி ராப்பர் 3-ம் பக்கம் பார்க்க]

# இனியேனும் பேச்சைவிட்டுச் செயல் உண்டா?

ஸ்ரீ வி. கே. பார்த்தசாரதி அய்யங்கார், பி.ஏ., பி.எல்.,

“தாயைக் கொல்லும் பஞ்சத்தைத்
தடுக்க முயற்சி யுறார்,
வாயைத் திறந்து சும்மா!—கிளியே!
வந்தே மாதர மென்பார்”

### பத்து வருடத்திற்குப் பிறகும் இந்த நிலைமையா?

எங்கும் பேச்சு நலமா யிருக்கிறதே யொழிய, செயலில் நல மேதுங் காணோம். வலிமையற்ற தோளும், ஒளியிழந்த குரலும், கிலிபிடித்த நெஞ்சும், 1947க்கு முன் இருந்ததற்கு மேற்பட்டே 1957ல் இருந்துவருகிறது. சுதந்திர இந்தியாவில் இன்று வாழும் நாம், எண்ணிலா நோயுடையோம்; எழுந்து நடப்பதற்கும் வலிமை யிலோம்; பொறியுற்ற விலங்குகள்போல் வாழ்வோராகிறோம். நெஞ்சில் உரமுமின்றி, நேர்மைத் திறமுமின்றி, வஞ்சனை சொல்வார் வாய்ச்சொல்லில் வீரர்! யந்திரசாலை யென்பர்; எங்கள் துணிகள் என்பர்; உப்பென்றும், சீனியென்றும், உள்நாட்டுச் சேலையென்றும் செப்பித்திரிவர், செய்வதறியார். நாவினுற் சொல்வதல்லால், நம்புதலற்றார் இவர்! சிந்தையில் கள் விரும்பிச் சிவ சிவ என்பதுபோல, வந்தேமாதரமென்பார், மனதில் அதனைக் கொள்ளார்!

பழமை பழமையென்று பாவனை பேசலன்றிப்
பழமை யிருந்த நிலை பாமரர் ஏதறிவார்!—

சொந்த நாட்டிலே பிறர்க்கடிமை செய்து வாழ்ந்த நமது நிலையை மேற்சொல்லப்பட்ட வார்த்தைகளிட்டுப் பாரதியார் முன்னர் வருந்திய வர்ணனையே சுதந்திரம் பெற்ற நமதரசின் கீழ் வாழும் இன்றும் நமக்கு இருந்து வளர்ந்து வருகிறது.

### நவநாகரிகத்தின் அலங்கோலமா?

2. தேர்ந்த நாகரிக முறைகளில், வழிபறியும், திருட்டும், கொள்ளையும், கொலையும் கலையாய் வளர்ந்து, இரவிலும், பகலிலும் எந்தெந்த இடங்களிலும் தினந்தவருது நடந்தேறுவதைத் தினசரிப் பத்திரிகைகள் விவரமாய் வெளியிடுகின்றன.

கல்கத்தா கார்ப்பொரேஷன் அதிகாரிகள் சிலரும், சிப்பந்திகள் சிலரும் இதரர்களுடன் கலந்து சதிசெய்து அனேகலக்ஷ ரூபாய்களை அப்புறப்படுத்திச் சுயம்பிரயோசனங்கொண்ட கதை, ‘கல்கத்தா ட்யூப்வெல் கேஸ்’ என்று வெளிப்பட்டுள்ளது.

ரயில் எஞ்சின்கள் தினமும் இசைகெட்டுத் திசை மாறி, எதிரில் நிற்கும் ரெயில் மீது ஓடிவரும் ரயில்கள் பட்டம்பகலில் முட்டிப் பாய்ந்து மோதி, உயிருக்கும் பொருளுக்கும் பெருஞ்சேதம் விளைவிப்பதும், ஆகாயவிமானங்கள் தடுமாற்றமுற்றுத் தவறி

வீழ்ந்து அனேகமுயிர்கள் அரைநொடியில் அகன்று மறைவதும், பஸ்ஸுகளும், லாரிகளும், மோட்டார்களும், சைகிள்களும், ரிக்ஷாக்களும், கட்டைவண்டிகளும் மோதிக்கொண்டும் வழிநடையாளர் மீது ஏறியும், கணக்கற்ற உயிர்கள் தினப்படி மடிவதும், தீ விபத்துக்களும், தற்கொலைகளும், சமூகக்கொலைகளும், பட்டினிச்சாவும், பரதவிப்புச்சாவும்—இம்மாதிரியான கோர சம்பவங்களே தினப்படி நிகழ்ச்சிகளாக அதிகரித்துத் தினசரிப் பத்திரிகைகளில் நிறைந்து வருகின்றன.

எங்கும், எதிலும் எப்பொழுதும் கட்டுப்பாடும், கண்டிப்பும், பேச்சளவேயா யுள்ளதே யொழிய, காரியமாக வேண்டுமானால் கைக்காசு கொடுத்தே சாதித்துக்கொள்ள வேண்டியதா யிருக்கிறது.

இங்கிலையில் கிருபளானி யவர்கள், லஞ்சப் பேயையும், பதவிகளுக்குப் பந்துமித்ரர்களை நுழைத்திடும் அநீதி முறைகளையும் அரசாங்கத்தார் அறவே ஒழித்தாலின்றி க்ஷேமமும் ஒழுங்கும் நாட்டில் ஏற்படாதெனவும், மக்கள் நலம்பெறாரெனவும், சமதர்மம் உண்டாகாதெனவும் முறையிட்டுப் பேசிப்போகிறார்.

புளூஜுரம் இதுவரை படுத்தியபாடு போதாதென்று இரண்டாம் வீச்சாக, மீண்டும் அதிக உக்கிரத்துடன் இந்நாட்டில் மூண்டு பரவித் தொந்திரை கொடுக்கப்போகிறதென பங்களூர் அதிகார வட்டத்தினர் முன் எச்சரிக்கை விடுத்துள்ளனர். இது வைத்தியர்களுக்கு ஓர் பிழைப்பாயிற்றென்று சிலர் பேசிக்கொள்கின்றனர்.

நிதிமந்திரி சுமத்துவதாகச் சொல்லிய புது வரிச்சுமையாலுண்டாகிய மக்கள் மனக்குழப்பமும், அரசியல் கட்சியார் வாதவேகமும், அரசாங்கக் கட்சியார் தீர்மானங்களும் இன்னமும் தெளிவுபடாததுடன், வருங்காலத்தை மேலும் இருளடையச் செய்தே நாட்டு மக்கள் மனத்தில் பீதியெழுப்பிப்போகிறது.

'லஞ்சம் ஒழிக' 'திறன் மிகுக' 'சிக்கனம் பெருக'.

முதல்ஐந்தாண்டுதிட்ட பூர்த்தியைக் கணிசித்து, டெல்லித் தேசிய அபிவிருத்திக் கவுன்சிலில் அறிக்கை வாசிக்கையில், திட்டக்கமிஷன் அதிருப்திகொண்டே பேசி, லஞ்சம் போக்கி, திறன் நோக்கி, சிக்கனம் ஏற்றாலொழிய இரண்டாம் ஐந்தாண்டு திட்டம் பலிதமடையாதென்றும், க்ஷேமலாப நாடு ஏற்படாதென்றும் சந்தேகமறக் கூறியுள்ளார்கள்.

நயாபைசா வந்தபிறகு பஸ் கண்டக்டர்கள் தினம் இரண்டு மூன்று ரூபாய்க்குக் குறையாமல் சில்லரை கொடுப்பதில் அனாயாசமாக லாபம் பெறுகிறார்களாம். இதற்காகப் பிரயாணிகளுடன் சில்லரைக்குப் போரிட்டு ஆபீஸ் நேரங்களில் பஸ்ஸை நிறுத்தி வைக்கும் அடாத்தகாட்சி, தேசியப் போக்குவரத்துச் சாதன நிர்வாகிகளின் லஞ்சம் போக்கித் திறன் மிகுக்கும் குணத்தை நன்கு எடுத்துக் காட்டுகிறது.

18324

எந்தப் புதுத் திட்டமும், உடனே அதற்கான இடைச் சுரண்டலுக்கோ, கள்ளமார்க்கெட்டிற்கோ, லஞ்ச ;அபிவிருத்திக்கோ ஆதாரமாகியே வருகிறது என்பது இன்று எல்லோரும் அறிந்தும் அகற்றவொண்ணா தீமையே. லஞ்சமும், திறனின்மையும் வீண்விரயமுமே வேண்டப்பட்டதுபோல இன்று நிலைத்துவிட்டது யாவரும் ஒப்பும் உண்மையே.

வெளிநாட்டில், விஷவாயு அணுகுண்டு வீச்சு தடுத்து உலக சமாதான ஸ்தாபனார்த்தம் தனது பஞ்சசீலக் கொள்கைகளைப் பிரகடனம் செய்துவரும் இந்தியப் பிரதமர், தனது உள்நாட்டில், 'லஞ்சம் ஒழிக'—'திறன் மிகுக'—'சிக்கனம் பெருகுக'—என்ற பெருங்கூச்சல் ஏகமனதாய்க் கிளம்பியோங்குவதை ஆங்கிருந்தே கேட்டதும், உணவுப்பொருள் விளைவை மிகுத்திடவும் அலுவலக சிக்கனம் பெருக்கிடவும் மாகாணப் பிரதமர்களுக்கும் தனது சகாக்களுக்கும் கடிதம் எழுதி இக்கூச்சலை அடக்கச் சொல்லிவிட்டாராம். அவர் கடமை முடிந்துவிட்டது அக்கடிதம் எழுதியதோடு.

### யானைப்பசிக்குப் பிடி சோளப்பொறியா?

இதற்கு உடனடியாக, செயலம்சத்தில், யூனியன் மந்திரிகள் தமது சம்பளத்தில் நூற்றுக்குப் பத்துவிகிதமும், ஜனாதி தி தன் சம்பளத்தில் ஆயிரமும் தியாகம் செய்துவிட்டார்களாம்!—எல்லாம் சேர்த்தும், அரசாங்கச் செலவில் எம்மாத்திரம்? யானைப் பசிக்குப் பிடி சோளப்பொறியோ, கடலில் கரைத்த ஒரு பலம் காயமோ போலதானே!—இதுதான் சிக்கனமா? அரசாங்கத்தார் கடமையின் முடிவா?—

படாடோபங்களும், வரவேற்பு விழாக்களும், புகழுரைப் பத்திரங்களும் நிறுத்தப்படப்போகின்றனவாம்: மந்திரிகள் வண்டிமீது தேசியக்கொடி பறக்கப்படாதாம் இனி: ராஜாங்க இழிதர உத்தியோகஸ்தர்களுக்கு உடை மாற்றப்படுமாம்!—இதுதான் திறன் மிகுத்தலா?

### கல்லூரிகளுக்கு அனாயாசவரும்படியா?

பரீட்சை முடிவுகள் தெரிந்து, பிள்ளைகள் கல்லூரிகளில் இடந்தேடி யலையும் காலம் ஜுன் மாதம். காலேஜில் சேர அப்ளிகேஷன் போடுகையில் 3½ முதல் 5½ வரைக்குமாக, ஒருபிள்ளைக்குச் சுமார் 15 ரூபாய்விகிதம் வரியொன்று, பிள்ளைகளைப் பெற்றோர் கட்டியாகவேண்டும். இதன் மூலம் கல்லூரியொன்றுக்குச் சுமார் 2 முதல் 3000 குறையாது அனாயாச வருமானம்.

ஜுன் 15க்குள் அப்ளிகேஷன்கள் வரவேண்டுமென்று முதலில் பிரசுரித்தார்கள்: அதற்குள்ளேயே வேண்டிய பிள்ளைகளை தேர்ந்தெடுத்து நிரப்பியாகிவிட்டது. இருந்தாலும், 15 தேதியென்பது மிகக் குறுகிய காலம்—அதை ஒத்தி வைக்கவேண்டுமெனக் கூச்சல் எழுந்துளதென்று சொல்லி, 25 தேதிக்கு தள்ளி வைத்தார்கள். இதில் சுமார் இரண்டு மூன்றாயிரம் ரூபாய் அனாயாச அனாவசிய வரும்படி. இந்தப் பிள்ளைகளுக்கு இடம் ஏது? ரூபாய் கட்டி அப்ளிகேஷன் போட்ட திருப்திதான்,

இடமென்னவோ சிபார்சு கொண்டவருக்கோ, பிரின்ஸிபாலின் அபிமானம் மிக்க உபாத்தியாயர்களது பந்துக்களுக்கோ தான். இவர்களுக்குக் கண்டு மிஞ்சிய இடம்தான் இதரர்களுக்கு:

தவிர, கோரும் பாடம் கிடைக்காது: கிடைக்கக்கூடிய காலேஜ் திறவாததால் வேண்டாத பாடம் கொடுக்கும் காலேஜில் சம்பளம் பூருவும் கட்டவேண்டும். கோரும் பாடம் கொடுக்கும் காலேஜில் பின்னர் இடமகப்பட்டால் முதலில் கொடுத்த பணம் இழக்க வேண்டியதுதான். இம்மாதிரி வரும்படி சில காலேஜிகளுக்கு!—வேண்டாததைக் கொடுத்துப் பணத்தைப் பிடுங்கிக் கொண்டு, வேண்டுவதைக் கொடுக்குமிடம் போகவிடாது செய்வது, கலைப்பயிற்சிதரும் கல்வி ஸ்தாபனங்களில் நியாயமா?— ஒழுங்கா?—

அதிகாரம் பெறுபவர் மனத்துக்கேற்றபடிக்கெல்லாம் சட்டமும் திட்டமும் வந்து மாறிக்கொண்டே யிருந்தால், வேரூன்றி விட்ட லஞ்சப்பழக்கம் எப்படி ஒழியும்? அகற்றப்பட்ட திறன் எப்படி மிகும்? ஒழிக்கப்பட்ட சிக்கனம் எங்கிருந்துண்டாகும்?

### அடி ஓட்டையைக் கவனியாது... பயன் என்ன?

ராஜாஜி, பக்தியைப்பற்றியும், அஹிம்ஸையைப்பற்றியும், மானிட தர்மத்தைப்பற்றியும, எழுதிக்கொண்டே போகலாம்—. நேருஜி பஞ்சசீலமும், அரசாங்கச் சிக்கனமும், லஞ்ச ஒழிப்பும், திறன் மிகுப்பும் பேசிக்கொண்டே வெளிநாட்டுப் பிரயாணங்கள் செய்து போகலாம்.—ஆனல், சொல்வதை யெல்லாம் செயலில் நடத்துவோர் யார்?—எப்பொழுது?—எப்படி?—அதைக் கவனிப்பாரே கிடையாதே இன்றைய அரசியல் நிலையில்! கலயத்தின் அடி ஓட்டையைக் கவனியாது, அதன் மேல் அழுக்கைப்பற்றிப் பேசிப்போவதில் என்ன பயன்? சுகமும் க்ஷேமமும் எட்டிலும் பேச்சிலுந்தானே! அனுபவ சுகமெல்லாம் அதிகாரமும் பதவியும் பெறுவோர்க்கல்லவா அடிவழியே கசிந்து போகிறது!—பொதுமக்களுக்கு கிட்டுவது மேலே மிதக்கும் அனுபவ கஷ்டநஷ்டந்தானே! இதைக் கவனிப்பாரில்லையே—. பொதுமக்கள் கண்விழித்து, மேல் மிதப்பைவிட்டு அடி ஓட்டையை அடைக்க முன்வந்து, பேச்சை விட்டுச் செயல் வேண்டுமெனப் புரட்சி கிளப்புவதில் ஒன்று சேர்ந்தாலொழிய, நம் நாடு நலன் பெறும் வழியில்லைதான்—. இனித் தீரவேண்டிய பிரச்சினை, 'பேச்சை விட்டுச் செயல் உண்டா' என்பதுதான்—. வாழ்க பாரத ஸமுதாயம்!

# காளிதாஸர் கனவு

## 10, ஊர்வசி : சௌந்தர்ய தேவதை.

[ஸ்ரீ. கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரி]

[சென்ற இதழ்த் தொடர்ச்சி]

புரூரவனுடைய மனக்குழப்பத்தை இப்படி வர்ணித்துக் காளிதாசர் பிறகு கூறினார். "இந்த நாடகத்தின் நான்காவது அங்கத்தில் நான் உலகத்தின் வெளியழகுகளையும் மனோமயமான உலகத்தின் உள்ளழகுகளையும் வெளியிட்டிருக்கிறேன். காவ்ய அழகையும் கீத அழகையும் சேர்த்துச் சிறப்பித்திருக்கிறேன். நீ இத்தகைய சோபையை நன்குணர்ந்து அச்சுவையை உலகத்திற்கு நன்கு அறிவிக்கவேண்டும்'' என்று கற்பனை ஒளிக்கண்களில் வீசக்கூறினார்.

இதைக் கேட்டவுடன் என் மனதில் ஏற்பட்டக் களிப்பையும் கொந்தளிப்பையும் என்னால் அடக்கமுடியவில்லை. "குருநாதா! உலகத்தில் எவ்வளவு காவ்யங்கள் நாடகங்கள் இருந்தாலும் உங்களுடைய விக்கிரமோர்வசீய நாடகத்தின் நான்காவது அங்கத்திற்கு இணையேகிடையாது. வான்மீகி ராமாயணத்தில் சீதையைப் பிரிந்த இராமருடைய மனக்குழப்பம் அற்புதமாக வர்ணிக்கப்பட்டிருந்தாலும் உங்களுடைய காவ்ய சோபையும் நாடக சௌந்தர்யமும் அற்புதத்திலும் அற்புதம். இயற்கை சாம்ராஜ்யத்தையும் மனோராஜ்யத்தையும் நன்கு பிணைத்து மெருகு கொடுத்து நீங்கள் அளித்திருக்கும் காவ்ய நாடக கீத விருந்து தெய்வீகச் சுவையுள்ளது. அதை உலகம் எப்பொழுதும் போற்றும்'' என்று கூறினேன்.

பிறகு காளிதசர் கூறினார்: "இப்படி புரூரவன் வருந்திய பொழுது இரண்டு கற்களுக்கு நடுவில் ஒரு பளபளப்புள்ள பொருளைக் கண்டான். அது நெருப்புத் துண்டம்போல் விளங்கிற்று. அதைக் கையில் எடுத்துப் பார்க்க விரும்பினன். மருபடியும் ''ஊர்வசி மறைந்த பிறகு இது எதற்கு? அவளுடைய கூந்தலில் இதை வைத்தால் எவ்வளவு அழகாக இருக்கும்'' என்று எண்ணினன். அப்பொழுது ஆகாயவாணி ''குழந்தாய்! இந்த மணியை எடுத்துக்கொள், இது கௌரி தேவியின் பொன்னடியிலிருந்து உண்டானது. அது உன்னை உன் காதலியுடன் சேர்ப்பிக்கும்'' என்றுகூறியதைக் கேட்டு அளவற்ற களிப்பை யடைந்தான். அந்த மணியைக் கையிலேந்தி "நீ அவளை என்னுடன் சேர்ப்பித்தால் பரமசிவன் திங்களைத் தலையில் வைத்திருப்பதுபோல் நான் உன்னை என் சிரமேற் தாங்குவேன்'' என்றான் பின் மலரற்ற ஒரு கொடியை நோக்கி "ஏன் இந்தப் பூவற்ற கொடி என் மனதைக் கவர்கின்றது'' என்று ஆச்சர்யமடைந்தான் "இந்தக் கொடியின் இலைகள் மழையினால் அலம்பப் பட்டுக் கண்ணீரால் நனைந்த ஊர்வசி உதடுகள் போல் இருக்கின்

றன. நகைகளை அணிந்து கொள்ள வேண்டாமென்று சினத்தால் விடுத்த அவள் மலரற்ற இந்தக் கொடியாக மாறிவிட்டாளோ என்று தோன்றுகின்றது" என்று நினைத்துக் கண்களை மூடி அதைத் தழுவிக்கொண்டான். உடனே அது அற்புதமாக மாறி ஊர்வசியாயிற்று. ஆனால் கண்களை மூடிக்கொண்டிருந்த அரசன் கண்களைத் திறக்கவில்லை. "கண்களைத் திறந்து ஊர்வசியைக் காணவிட்டால் இப்பொழுது கொடியை ஊர்வசியாக நினைத்துத் தழுவுதலால் ஏற்பட்ட இன்ப உணர்ச்சி நீங்கிவிடுமே?" என்று துயரப்பட்டான். மருபடியும் "இது ஊர்வசியாக மாறியிருந்தால் அவளைப் பார்ப்பதால் ஏற்படும். இன்ப உணர்ச்சி ஏற்படாதே" என்று துயரமடைந்தான். பிறகுக் கண்களைத் திறந்து பார்த்து ஊர்வசியைக்கண்டு மட்டற்ற மகிழ்ச்சியை அடைந்தான். "உயிரற்றவன் உயிரையடைந்ததுபோல் உன்னைப் பிரிந்து அளவற்ற துயரத்தில் ஆழ்ந்திருந்தநான் உன்னை மீண்டும் அடைந்தேன்" என்றான். ஊர்வசியும் "என்னுடைய தவருன கோபத்தால் தங்களுக்கு இவ்வளவு துயரம் ஏற்பட்டதே' என்று வருந்தினள். "நீ வந்துவிட்டாயே அதே எனக்கு உன்னத நிலை. என் துயரந் தீர்ந்து விட்டது. என் இன்பத்திற்கு அளவே இல்லை" என்றான். ஊர்வசி மகிழ்ந்து "பிராணநாதா! நான் இந்தக் காட்டுக்குள் நுழைந்தேன். இது முருகன் வனம். இந்த வனத்துள் வரும் பெண்கள் கொடியாக மாறிவிடவேண்டும் என்று அவருடைய உத்தரவு. அக்காரணத்தால்தான் எனக்கு இந்த நிலை ஏற்பட்டது. இந்த உண்மை எனக்குத் தெரிந்திருந்தும் நான் அதை மறந்துவிட்டேன். கௌரீதேவியின் பொன்னடிகளில் பிறந்த இந்த மணியால் அல்லவா எனக்கு மறுபிறப்பு ஏற்பட்டு உங்களுடைய அன்பின் ஆனந்தத்தையடைய முடிந்தது" என்று உள்ளம் பூரித்துக் கூறினள். அந்த மணியைத் தன் சிரத்தின் மேல் அணிந்து கொண்டாள். அரசன் மகிழ்ந்து "ஊர்வசி! இந்த மணியைத் தலையில் அணிந்த உன்னைப் பார்த்தால் செம்மை விளங்கும் இளங்கதிரவன் கிரணங்களால் மலர்ந்த தாமரை மலரைப்போல் தோன்றுகிறது" என்று வியந்து கூறினன். பிறகு இருவரும் நாட்டின் தலைநகரை அடைந்தார்கள்.

### விக்கிரம ஊர்வசீ சாம்ராஜ்யம்

அரசனுக்கும் ஊர்வசிக்கும் ஒரு குழந்தை பிறந்தது. அதன் பிறகு இந்திரன் உத்தரவுப்படி ஊர்வசி அரசனை நீங்கி தேவலோகத்திற்குப் போகவேண்டுமே என்று அச்சப்பட்டு குழந்தையை தவஞ்செய்து கொண்டிருந்த சத்தியவதியிடத்தில் ஒப்படைத்து அரசனிடத்தில் குழந்தையைப்பற்றிக் கூறுமலிருந்துவிட்டாள். ஒருநாள் ஒரு கழுகுச் சங்கமனீய மணியை மாமிசமென்று நினைத்துத் தூக்கிக்கொண்டு போய்விட்டது. அரசனுடைய அம்புக்கெட்டாத தொலையில் பறந்துபோன அக்கழுகு ஓரதிசயமான அம்பால் அடிபட்டுக் கீழேவிழ அதை அரசனிடம்

ஒப்புவித்தார்கள். அந்த அம்பில் "புரூரவனுக்கும் ஊர்வசிக்கும் பிறந்த ஆயுவின் அம்பு" என்ற எழுத்துக்கள் வெட்டப்பட்டிருந்தன. அச்சமயத்தில் சத்தியவதி ஆயுவை அழைத்துவந்து அரசனிடம் ஒப்புவித்தாள். "ச்யவன ரிஷி இவனுக்குக் கல்வியையும் வில்வித்தையையும் கற்பித்தார். இவனுக்குத் தக்க வயது வந்துவிட்டதால் அவர் இவனை உங்களிடம் கொண்டு விடும்படி உத்தரவு செய்தார்" என்று கூறினாள். ஊர்வசி தான் இந்திரன் கட்டளைப்படி அரசனை விட்டுப் பிரிய வேண்டுமே என்று மனமுருகினாள். அரசன் "ஆயுவுக்குப் பட்டங்கட்டிவிட்டு நான் தவஞ்செய்து நீ யிருக்குந் தேவலோகத்திற்கே வருவேன்" என்று தீர்மானமாகக் கூறினான். அப்பொழுது நாரதர் அங்கே வந்து "தேவாசுர யுத்தத்தில் உன் உதவியை இந்திரன் வேண்டுகின்றான். ஆகையால் நீ தவஞ்செய்யப் போகக்கூடாது. ஊர்வசியும் நீயும் நித்திய தம்பதிகளாக இருக்கும்படி இந்திரன் கட்டளை" என்றார். அரசனும் ஊர்வசியும் அளவற்ற மகிழ்ச்சியுடன் ஆயுவுக்கு இளவரசுப் பட்டங்கட்டி ஆனந்தமாக வாழ்ந்தார்கள்.

---



கணவன்:—அடடா... திடீர்ன்னு இது என்ன ரிட்ரச்மென்ட். கச்சகாயும், சுண்டைகாயுமா பரிமாறி இருக்கயே!

மனைவி:—நன்னாதான் இருக்கு. ஊரு கெட்டுகடக்கு எங்கெ பார்தாலும் கால்ரா, ஜுரம். அரவயிறுதான் சாப்பிடனும்.

# மஹானின் மறைவு.

ஸ்ரீமான் பண்டித திருவாலி ராமானுஜாசாரியர்ரை சிறந்த பண்டிதர், மேதாவி என்ற முறையில் பல வருடங்களாகத் தெரியும். ஆனல் கடவுளின் க்ருபையால் ஸ்வாமி அவர்களை வைத்தமாநிதி குடும்பத்தாருடன் ஒருவராகக் கலந்து பழகும்படியான வாய்ப்பு சுமார் பத்து வருட காலமாக எங்களுக்குக் கிடைத்தது. அந்த மகான் எங்களுடன் எப்படி பழகினர் என்பதை எடுத்து சொல்ல வாக்கியமே இல்லை. பெற்ற தாயாய், தந்தையாய், ஆசார்யனாய், அந்தரங்க தோழனாய், விளையாட்டுக் குழந்தையாய், வீட்டிற்கு பெரிய துணையாய் இன்றும் சிறப்பித்து எந்தெந்த முறையில் சொல்லலாமோ அப்படியெல்லாம் பழகினர். பல சரக்கு மளிகை கடையில் எந்த சரக்கும் கிடைப்பதுபோல் அந்த மகானுபாவரிடத்தில் சத்விஷயங்கள் எண்ணற்ற முறையில் நிறைந்து ஊறி கிடந்தன. 'அள்ள அள்ள சுறக்கும் கொள்ளை இன்பம்' என்று சொல்வதுபோல் கேட்கக் கேட்க அவர் இடத்தில் விஷயங்கள் சுறந்துகொண்டே இருக்கும், அதை பலருக்கு தன் நலமற்ற த்யாகத்துடன் தானம் செய்து வாழ்வித்த தனி பெருமை அவருக்கே உரித்தாகும்.

எந்த நிமிஷத்திலும், எத்தகைய நோய்வாய்பட்டு இருக்கும் தருணத்திலும் "ஸ்வாமி இந்த விஷயத்திற்கு ஒரு மேற்கோள் வேண்டும், இதற்கு விளக்கம் வேண்டும், இதற்கு ப்ரமாணம் வேண்டும்" என்று கேட்டால் விஷயத்தில் உள்ள ஒரு அபரிமிதமான ருசியினல் தன் நிலைமையையும் மறந்து உடனே அவைகளை தேடி எடுத்து கொடுத்துவிட்டு மறு காரியம் செய்வார். இத்தகைய தன்னலமற்ற சிறப்பு வாய்ந்த குணம் எத்தகையோருக்கும் அமைவது அரிதிலும் அரிது.

ப்ரத்யேகமாக வைத்தமாநிதி குடும்பத்தின் ஜோதியாய் விளங்கிய வை. மு. ஸ்ரீ. யிடம் அவருக்கு இருந்த ப்ரேமையை அளவிட்டுச் சொல்லவே முடியாது. வை. மு. ஸ்ரீ. பண்டிதர்களாலும் கொண்டாடக்கூடிய பெருமையை அடைந்ததற்குக் காரணம் இவருடைய ப்ரஸாதம் என்ருல் மிகையாகாது.

ஜுன் மாதம் 8-ம் தேதி அன்று அவர் எங்களுடன் பேசிக் கொண்டிருந்தபோது வை. மு. ஸ்ரீயை நினைத்து புலம்பிவிட்டார். "அப்பா...எங்களை எல்லாம் விட்டு எப்படி போனயோ..." என்ற வாக்யம் அவர் வாயினின்று உதிர்ந்தது, எங்கள் கண்ணீர் ஆராய் பெருகியது. அத்தகைய அன்பு சிறுவனைப் பின்பற்றி ஜுன் 13-ம் தேதி தானும் மறைந்துவிட்டார். எங்கள் குடும்பத்திற்கு வலது கை உடைந்ததுபோல் ஆய்விட்டது. பண்டித உலகத்திற்கே பெரும் நஷ்டம் என்ருல் மிகையாகாது. அந்த மகானுக்கு எங்களுடைய அஞ்சலியை செலுத்துகிறோம்.

# பகவத்கீதைக் குறிப்புகள்

ஸ்ரீராஜாஜி

## பதினைந்தாவது அத்தியாயம்.

ஆண்டவனுடைய லீலையை விவகரித்து உணர்வது முடியாத காரியம். சிருஷ்டியே ஒரு மாயை. பிரபஞ்ச பரிபாலனம் அதைவிடப் பெரிய விந்தையும் மாயையும். கர்ம நியதியை ஒருவாறு அறிவோம். செய்த காரியம், எண்ணிய எண்ணம், இவற்றுக்கு எடைக்குஎடை சரியாகப் பலன் உண்டாகியே தீரும். நாம் செய்த ஒரு வினையை நாம் மறந்துபோகலாம். ஆனால் கர்ம நியதி அதை மறக்காது. வினையிலிருந்து வினை உண்டாகி வளர்ந்து கொண்டேபோகும்.

"சுத்தமும் அபாப வித்தமுமான ஆன்மா எவ்வாறு முதல் முதலில் பாபத்தில் இறங்கிற்று? முதல் விதையான கர்மம் எங்கிருந்து தோன்றிற்று? ஏன் தோன்றிற்று? அது ஆண்டவனுடைய சங்கற்பம் அல்லவா? நமக்கு ஏது சுதந்திரம்?"—இத்தகைய கேள்விகள், அறிவுக்கு அடங்காத விஷயத்தை அறிவுக்குள் அடக்கி யாளப் பார்க்கும்போது கிளம்புகின்றன. பண்டிதர்கள் சமாதானங்கள்சொல்லிக் கேள்விகளை அடக்கப் பார்க்கிறார்கள். ஆனால் உண்மையில் சிக்கல் தீரவில்லை. சம்சாரச் சுழலுக்கு ஆண்டவனே காரணமா? அல்லது நம்முடைய வினைகளும் வினைகளினால் உண்டாகும் குணங்களும், குணங்களினால் விளையும் புது வினைகளும் காரணமா? நம்முடைய வினைகள் ஆண்டவன் சங்கற்பமின்றி எவ்வாறு முதன் முதலில் உண்டாகும்? இந்தச் சிக்கல் தீருவதற்கு மனிதனுடைய அறிவில் போதிய சக்தி விளக்கம் இல்லை. மனிதனுடைய அறிவு குற்றமும் இருளும் கலந்த ஒருபொருள். அதைக்கொண்டு எவ்வாறு இந்தப் பெருஞ்சிக்கலைத் தீர்க்க முடியும்? முடியாது.

இதைக் கீதையில் 15—வது அத்தியாயத்தின் ஆரம்பத்தில் கண்ணன் பழைய உபநிஷத்து மந்திரத்தை வைத்துச் சொல்லுகிறான்.

**சுலோகம்: 1—6**

இந்த மனிதவாழ்க்கை ஒரு அசுவத்த மரம். அற்புத அசுவத்த மரம். இந்த மரமானது மேலிருந்து கீழே வளர்கிறது. கீழிருந்து மேலேயும் வளர்ந்து ஓங்குகிறது. மேலும் கிளைகள். கீழேயும் கிளைகள். வேரும் அப்படியே. கீழும் மேலும் வளர்கிறது. இந்த மரத்தின் முழு வடிவத்தை யாரும் கண்டதில்லை. விஷயங்களில் புலன்கள் சென்று

குணங்கள் வளர்ந்து செல்கின்றன. மரணமும் பிறப்பும் உண்டாகி வருகின்றன. இதற்குக் கண்ணுக்கு எட்டும் ஆதியும் முடிவும் இல்லை. இந்த அற்புத அசுவத்தமரத்தை வேரோடு வெட்டி அறுத்துவிடவேண்டும். அப்படி வெட்டுவதற்குக் கருவி யாதென்றால் பற்றறுத்த மனநிலையேயாகும். அதைக் கொண்டு முக்தி அடைவாய். மீளாத விஷ்ணு பதத்தை அடைவதற்குச் சாதனம் பற்றுக்களைக் களைந்து விடுவதே.

அனைத்தையும் தோற்றுவித்த ஆண்டவனை அடைவதற்கு அவனைச் சரண்புகுவதே வழி. பசையும் பற்றும் அறுத்துவிட்டுச் சுகம் துக்கம் என்கிற மோகத்தை ஒழித்துக்கொண்டு, ஞானத்தை அடைந்து வாழ்க்கை நடத்துவாய். நடத்தினால் சூரிய சந்திராதிகளின் ஒளியையும் கடந்து தன்னொளியே தனக்கு ஒளியாகக் கொண்டு நிற்கும் பரமபதம் போய்ச் சேருவாய்.

**சுலோகம்: 7—20**

பிரபஞ்சம் எல்லாம் ஆண்டவன் வடிவமே. அவன் சக்தியே நாம் காண்பதெல்லாம் என்பதை இந்த அத்தியாயத்தில் மறுபடியும் கீதாசாரியன் விளக்குகிறான். "என்னுடைய அம்சமே இந்த ஜீவலோகத்தில் உயிர்களுக்கெல்லாம் உயிராக ஆதிமுதல் இருந்து வருகிறது. அதுவே தேகத்தை உண்டாக்கிக் கொண்டும் புலன்களை உண்டாக்கிக் கொண்டும் ஜன்மங்கள் எடுத்து வருகிறது. சூரியன், சந்திரன், அக்கினி எல்லாம் என்னுடைய அம்சமே. பூமியும் நானே, ஜீவன்களுக்கு உணர்வு தந்து காப்பதும் நானே, வயிற்றில் உணவை ஜீரணம் செய்யும் நெருப்பும் நானே. சுவாசத்தில் ஓடும் காற்றும் நானே. நினைவும் அறிவும் மயக்கமும் எல்லாம் நானே. ஆன்மாவும் நானே, தேகமும் நானே. ஈசுவரனும் நானே, புருஷோத்தமனான என்னை இவ்வாறு பூரணமாக அறிந்தவனே ஞானவானாவான். அவன் என்னை ஆராதித்து நற்பதம் அடைவான்" என்கிறான்.



# எங்களது இன்பச் செலவு

ஸ்ரீமான் T. S. ராஜகோபாலன், B.A., L.T.,
இந்து உயர்நிலைப் பள்ளி, திருவல்லிக்கேணி.

## 7. ஜெய்பூர்.

துவாரகையில் கண்ணபிரானைக் கண்ணாரக் கண்டு, திருவடிதொழுது, அன்றிரவே ரெயில்வே ஸ்டேஷனுக்குச் சென்றோம். காலை 5-10 மணிக்கு வண்டி துவாரகையை விட்டுப் புறப்பட்டு இரவு 8 மணிக்கு வீரங்காம் சந்திப்பு வந்து சேர்ந்தது. அங்கு பிராட்கேஜ் வண்டிப் பெட்டியில் ஏறிக்கொண்டோம். மறுநாட் காலையில் விழித்தெழுந்ததும், சுற்றுப் புறத்திலுள்ள இயற்கை வனப்பு, எங்களது கண்ணையும் உள்ளத்தையும் ஒருங்கே கவர்ந்தது. ரயில்வண்டி அரவில்லி மலைப்பிரதேசம் வழியாகச்சென்று கொண்டிருந்தது. உயர்ந்த மரங்கள் செறிந்து போர்த்த குன்றுத் தாழ்வரைகளும், தாழ்ந்த பள்ளத் தாக்குகளும், இவற்றுள் வளைந்து வளைந்து ஓடும் சிற்றருவிகளும், இடையிடையே யுள்ள சிறு சமவெளிகளில் நெடிய மரங்களும் அவற்றைப் புல்கும் பெருங் கொடிகளும், தளிர் நிறைந்த சிறு செடிகளும், இவை யாவற்றையும் அணைந்த ஆதவனின் வெள்ளிய கிரணங்களும் அன்று காலை முதல் மாலை வரை எங்கள் கண்ணுக்குப் பெரு விருந்தாயின. அன்றிரவு 10-மணிக்கு சாவாய் மாத்பூர் சந்திப்பில் இறங்கி, மீட்டர் கேஜ் பெட்டியில் ஏறிக்கொண்டோம். மறு நாட் காலை ஜெய்பூர் வந்துசேர்ந்தோம்.

ராஜஸ்தானிலுள்ள முக்கிய நகரங்களுள் ஜெய்பூர் முதன்மையுற்றது. தோள் வலியும் மனோ வலியும் வாய்ந்த ராஜபுத்திரர் வாழ்ந்து வந்த இந்த ராஜஸ்தான், பல நூற்றாண்டுகளாக நம் நாட்டின் திலகமாய் விளங்கிவந்துள்ளது. ராஜபுத்திரர் வரம்பற்ற நாட்டுப் பற்றுடையவர்; நாட்டுக்காக உயிரையும் அளிக்கும் மாண்பினர். அவர்கள் போரில் வெற்றி பெறுவிடில் தம் உயிரையும் மாய்த்துக் கொள்வர். ராஜபுத்திரப் பெண்டிரின் வீரத்தையும் நாட்டுப் பற்றையும் பற்றி நாம் பல நூல்களில் படித்துள்ளோம். இத்தகைய ராஜஸ்தானத்தின் திலகமாயுள்ளது ஜெய்பூர். கணக்கற்ற மாட மாளிகைகளும், கோபுரங்களும், கோயில்களும், திண்ணிய மதிள்களும், வாயில்களும், வாவிகளும், ஏரிகளும்—இவற்றைச் சுற்றியுள்ள குன்றுத் தொடர்களும்—இந்த நகரம் இந்திரலோகமோ என நம்மை வியப்புறச் செய்கின்றன.

இந்நகரம் கி.பி. 1728-ஆம் ஆண்டில் இரண்டாவது ஸாவாய் ஜெய் ஸிங் மஹாராஜ் என்பவரால் நிறுவப் பெற்றது; சில்ப சாஸ்திர முறைப்படி அமைந்துள்ளது.

நகரைச் சுற்றிலும் 20 அடி உயரமும், 9 அடி கனமுமுள்ள மதில் சூழ்ந்துள்ளது. இதற்கு ஏழு வாயில்கள் உள்ளன. இவை யாவும் ஒரேமாதிரியான வேலைப்பாடு வாய்ந்தவை. கிழக்கு - மேற்காகவும், தெற்கு - வடக்காகவும் செல்லும் நெடுஞ்சாலைகள், நகரத்தின் பரப்பை ஆறு சம பாகங்களாகப் பிரிக்கின்றன. சாலைகள் ஒவ்வொன்றும் 110 அடி அகலம் உள்ளது. இவற்றை அடுத்துள்ள சிறு சாலைகள் 55 அடி அகலம் உள்ளன. பெரிய வியாபாரச் சங்கங்களும், கடைகளும் மிர்ஸா-இஸ்மெயில் சாலையில் (Mirza Ismail Road) அமைந்துள்ளன. இங்குள்ள கட்டிடங்கள் பெரும்பாலும் ஒரே வகையானவை; கண்களைக் கவரும் முறையில் அமைந்தவை.

நாங்கள் மிர்ஸா - இஸ்மெயில் சாலையில் நடுவிலுள்ள திகம்பர் ஜயின் என்பாரது தர்மசாலையில் தங்கினோம். ஆங்குள்ள தனவந்தர்களுள் முக்கியமானவர் திகம்பர் ஜயின். நாங்கள் தர்மசாலையில் இறங்கியதும் எங்களைப் பார்க்க வந்துவிட்டார் இவர். எங்களுக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யத் தமது ஏவலாளர்களை அனுப்பினார். அன்று சமையலுக்கு வேண்டியவற்றை அருகேயுள்ள கடைகளில் வாங்கிக்கொண்டோம், கறிகாய் மார்கெட் அண்மையில் இருந்தது. அதில் தக்காளிக்காய், கத்தரிக்காய், உருளைக் கிழங்கு, பழ வகைகள் முதலியன போர் போராகக் குவிந்திருந்தன. பச்சைமிளகாய் கத்தரிக்காய் போல் நீண்டு பருத்திருந்தது. கறிகாய்கள் புதியனவாகவும் சுவை மிக்கனவாகவும் இருந்ததால், அன்றைச் சாப்பாடு எங்களுக்கு ஆரமுதமாயிருந்தது.

காலையில் பலகாரம் செய்துவிட்டு 10 மணி சுமாருக்குப் பொருட்காட்சிச் சாலைக்குச் சென்றோம். இது நகரத்தின் தெற்குப் பகுதியிலுள்ள ராம் நிவாஸ் என்ற தோட்டத்தில் உள்ளது. தோட்டத்தின் வாயிலிலிருந்து காணும்போதே கட்டிடத்தின் அழகு நமது உள்ளத்தைக் கவர்கின்றது. உள்ளே செல்லும் நெடுஞ் சாலை, சுமார் 100 அடி அகலமுள்ளது; நவீன முறையில் அமைந்து மழமழ வென்றுள்ளது. அதன் ஓரங்களில் புல்வேய்ந்த நடைகளும், விசித்திரமாக வெட்டப்பெற்ற செடிகளும் சாலையின் எழிலைப் பன்மடங்கு பெருக்குகின்றன. சாலைவழியே சிறிது தூரம் சென்றதும், இதேமாதிரியாகச் செவ்வி வாய்ந்த வேறொரு சாலை இதைக் குறுக்கிடுகின்றது. இச் சாலையின் இரண்டு முனைகளிலுமுள்ள பெருங் கட்டிடங்களும், இடையே எதிரிலுள்ள பொருட்காட்சிச் சாலைக் கட்டிடமும், இவற்றைச் சூழ்ந்து தொலைவில் தோன்றும் குன்றுத் தொடர்களும் வெள்ளித் தகட்டில் பதித்த பலவகை ரத்தினங்கள்போல் திகழ்ந்தன.

பொருட் காட்சிச்சாலையின் கட்டிடம், உயர்ந்தவேலைப் பாடு வாய்ந்தது. சுவர்களின் ஒரு பகுதி வெள்ளைச் சலவை கற்களாலானது. தூண்கள் வட்டமானவை; இவற்றின் மேலுள்ள வளைவுகள் அரைவட்ட வடிவம் வாய்ந்தவை, பூவேலைப்பாடும் சித்திரங்களும் கொண்டவை. உள்ளே சென்றதும் பெரிய ஹாலில் அந்நகரில் அரசாண்டுவந்த மன்னர்களது படங்கள் சுவரில் வரிசையாக அமைந்திருந் ததைக் கண்டோம். உள்ளே யுள்ள அறை யொன்றில் ஜெய்பூரில் நெய்யப்பெற்ற பெருங் கம்பளங்களும், வெளி நாடுகளில் மேன்மையாகக் கருதப்படும் கம்பளங்களும், ஜரிகை வேலைப்பாடு வாய்ந்த விரிப்புக்களும், "ஜெய்பூர் வேலைப்பாடு" என்று பெயர்பெற்ற கைவேலைப்பாடு கொண்ட பித்தளைத் தாம்பளங்களும், பாத்திரங்களும் பலப்பல பார்த்தோம். தாம்பளங்கள் சில 4.5 அடி விட்ட மும் உடையன. இவற்றுள் ஒன்றில் ராமாயணக் காட்சி ஒன்றும், வேறொன்றில் மஹாபாரதத்திலிருந்து அசுவமேத யாகமும் பொறிக்கப் பெற்றிருந்தன. உள்ளே யுள்ள அறைகளில் ஹோமர், ஜூபிட்டர்—இவர்களது உருவச் சிலைகளும், எகிப்திய மன்னரின் சவக்கூடுகள், மம்மி (Mummy) எனப்படுவன இரண்டும், உலகிலுள்ள பாகங்கள் பலவற்றுள்ளும் பெயர்வாய்ந்த கலைகளும் சிற்பங்களும் சேமித்து வைக்கப்பெற்றிருந்தன. ஒரு ஹாலில் குழந்தை களுக்காக மண் பொம்மைகள் இருந்தன. இவை 10-வது நூற்றூண்டுமுதல் நாளதுவரையில் இந்த உலகிலுள்ள மக்களின் நாகரீகத்தின் வளர்ச்சியைக் காட்ட வல்லன. சைனு, ஜப்பான், பர்மா, பாரதம் முதலிய நாடுகளில் நாட்டு மக்கள், நகர மக்கள் எங்ஙனம் வாழ்கின்றனர் என்பது நன்கு விளக்கமுற்றுள்ளது. சுற்றுமுள்ள சுவர்களில் சித்திர வேலைப்பாடுகள் நேர்த்தியாகவுள்ளன. இராமா யண காலம்முதல் நாளதுவரையில் நிகழ்ந்த போர்களும், மன்னர்களது கொலுவும் வாழ்க்கையும் உயர்ந்த வர்ணங் களினல் ஓவியமாகக் காட்டப்பெற்றுள்ளன. இந்தப் பொருட் காட்சிச் சாலையிலுள்ளவற்றைப் பார்ப்பதற்குக் குறைந்தது இரண்டு நாட்களாவது ஆகும். உள்ளே பிரவேசிக்குமிடத்தில்

தேவீ யா ஹி கலாரூபா
ஸர்வபூதேஷு ஸம்ஸ்த்திதா ।
நமஸ் தஸ்யை நமஸ் தஸ்யை
நமஸ் தஸ்யை நமோ நம: ॥

என்று சுவரில் எழுதியிருந்தது. இதன் பொருள்: "யாவ ளொரு தேவி கலா ரூபமாக எல்லாவற்றுளும் நன்கு நிலை பொருந்தியிருக்கிறளோ, அவள் பொருட்டு வணக்கம்,

வணக்கம், வணக்கம்!" என்பதாம். இதன் மெய்ப்பாடு உள்ளே சுற்றி வந்த ஒவ்வொருவருக்கும் தோன்றும்: உள்ளே ஒவ்வோரிடத்திலும் நாங்கள் கலாதேவியைக் கண்டோம். நல்ல அறிவும் ஆற்றலும் வாய்ந்தவன் ஓவியத்தில் மாத்திரம் கலாதேவியைக் காண்பதில்லை; உலகில் பழகும் ஒவ்வொரு நொடியிலும் அவனது அநுபவம் ஓங்கி வருவதால், பெரியோருடன் பழகும்போதும், காட்சிகளைக் காணும்போதும், ஒவ்வொரு வகையாக அநுபவம் பெறும் போதும் ஆங்காங்குக் கலாதேவியைக் காண்கிறான்.

பொருட் காட்சிச் சாலைக்குப் பின் மஹாராஜா கல்லூரியும், அருகில் மஹாராணி கல்லூரியும், மஹாராணி காயத்ரீதேவி பெண் பள்ளிக்கூடமும் உள்ளன.

அன்று நடுப் பகல் போஜனம் முடித்துக்கொண்டு 2 மணி சுமாருக்கு நகரத்தைப் பார்க்க பஸ் ஒன்றில் சென்றோம். போகும்போது எங்களது பஸ், கடைத் தெருக்கள் வழியே சென்றது. கடைத் தெருக்களின் இருமருங்கிலுமுள்ள கட்டிடங்கள் காவி வர்ணம் தீட்டப் பெற்றவை. யாவையும் ஒரே மாதிரியானவை, ஏறக்குறைய சமமான உயரம் வாய்ந்தவை. நகரின் நடுவில் ஹவா மஹால் (Hawa Mahal) என்ற அரண்மனை உள்ளது. இது ஐந்து அடுக்கு வாய்ந்தது. ஒவ்வொரு சாரளத்தின் முடிவிலும் பலகோண வடிவமுள்ள மண்டபம் உள்ளது. மண்டபங்களின் உச்சி அரைக் கோள வடிவமாய் சித்திர வேலைப்பாடுள்ள தூபியைக் கொண்டது. அடுக்கு அடுக்காகவுள்ள இந்த மண்டபங்களின் தூபிகளும், நெடிய தூண்களும், சிற்ப வேலைப்பாடுகள் கொண்ட கைபிடிச் சுவர்களும், சாரளங்களும் வானில் வந்திறங்கிய விமானங்கள் நிரை நிரையாக அடுக்கி நிற்பனபோல் காட்சியளித்தன. இந்த அரண்மனை, முதலாவது ஸவாய் மாதோ ஸிங்க்ஜீ மஹாராஜ் என்பவரால் கி.பி. 1799-ஆம் ஆண்டில் கட்டி முடிக்கப் பெற்றது.

நகரிலுள்ள தெருக்களின் எழிலைப்பார்த்துக்கொண்டு, ஆம்பர் (Amber) என்ற பழைய நகரை நோக்கிச் சென்றோம். வழியில் நாங்கள் பார்த்த கட்டிடங்கள் பல. ஓரிடத்தில் பெரியதொரு ஏரியின் கரையிலும் நடுவிலும் மண்டபங்கள் உள்ளன. இவை முழுதும் ஜல் மஹால் எனப் பெயர்பெறும்.

ஆம்பர் என்ற பண்டை நகரம், ஒரு மலையின் அடிவாரத்தில் பரந்த ஏரியின் கரையில் அமைந்துள்ளது. அருகிலுள்ள மலையில் மேலேறிச் சென்றோம், அதன்மீதுள்ள ஆம்பர் அரண்மனையைப் பார்க்க. முதல் வாசல், சிங் பால்

என்ற பெயர் வாய்ந்தது. உள்ளே சென்றதும் முதன் முதலில் சிலா தேவி கோயில் (சிலா தேவீ கா மந்திர்). உள்ளது. இது மிகச் சிறியதேயாயினும், முற்றிலும் சலவைக் கல்லாலே யானது; மிக்க வேலைப்பாடு கொண்டது. கோயிலின் மண்டபம் வெள்ளைக் கல்லாலானது; அதன் வாசலில் இரண்டு பக்கங்களிலும் வாழை மரங்கள்போலும் மாவிலைத் தோரணங்கள்போலும் சலவைக் கற்களிலே அந்த அந்த இயற்கை வர்ணத்திலேயே செய்யப்பெற்றுள்ளன. சிற்பக் கலாதேவியின் சீரருளால் இக்கலாதேவியின் ஆலயம் அழகுறச் சமைக்கப் பெற்றுக் காண்போரது கண்ணையும் உள்ளத்தையும் ஒருங்கே கவருமாறு நேர்த்திபெற்று விளங்குகின்றது. இந்த வாயிலைக் கடந்து உள்ளே சென்றதும் பெரியதொரு மண்டபத்தைப் பார்த்தோம்; இதற்கு திவான்-இ-ஆம் (Diwan-i-Am) எனப் பெயர். இதன் தூண்கள் சலவைக் கற்களால் ஆனவை; இதைச் சுற்றிச் செல்லும் தாழ்வாரம் சிவப்புக் கற்களால் ஆனது; தூண்களின் வேலைப்பாடு மிக நேர்த்தியானது. இதன் தெற்குப் பக்கத்தில் கணேஷ் பால் (Ganesh Pal) என்ற வாயிலைக் கடந்து மேலே ஏறினோம்; ஜாஸ் மந்திர், ஸோஹாக் மந்திர் (Sohag Mandir)—இவற்றிற்கு வந்துசேர்ந்தோம். ஜாஸ் மந்திர் என்பது செவ்வக வடிவமானது; அதன் ஓரங்களில் எண்கோண வடிவமுள்ள அறைகள் உள்ளன. ஸோஹாக் மந்திர் என்பதும் இதே மாதிரியான ஒருபகுதி; இது அந்தப்புரத்தினருக்கானது. இதை அடுத்து அழகிய தோட்டம் ஒன்று உளது. இந்தத் தோட்டத்திலிருந்து இளங்காற்று எப்போதும் சாரளத்தின் வழியே உள்ளே வீசுகின்றது. இந்த மந்திர்கள் இரண்டிலும் சுவர்களில் வேலைப்பாடு மிகவும் அழகாக இருக்கின்றது. பொன் ரேக்கிலும் வெள்ளி ரேக்கிலும் கொடிக் கருக்கு வேலைப்பாடு கொண்டவை சுவர்கள். சுவர்களில் வரிசை வரிசையாகப் பதித்துள்ள கண்ணாடித் துண்டங்கள், விளக்கொளியில் பல வகையான வர்ணக் கதிர்களைச் சுடர்விடுகின்றன. எண்கோண வடிவமுள்ள மண்டபத்தின் உச்சியில் ரசம் பாய்ச்சிய புறங்குவிக் கண்ணாடிகள் (Convex mirrors) பதிக்கப் பெற்றுள்ளன. விளக்கினொளியில் அங்குள்ளோரது உருவம் எங்கும் பலபடிகளாகக் காணப்படுகின்றது. உள்ளே வேறு சில மண்டபங்களும் கூடங்களும் இருந்தன. இவற்றின் கதவுகள் சில சந்தன மரத்தாலானவை; சித்திர வேலைப்பாடு கொண்டவை. இந்த அரண்மனையில் ஒரு பகுதியை மிகவும் விரைவில் சுற்றிப்பார்பதற்கு எங்களுக்கு 2 மணிக்கு மேலாயிற்று. கதிரவன் மறையுந் தருணமாதலால் நாங்கள் அவசரமாக இறங்கி வந்து எங்கள் பஸ்ஸில் ஏறிக்கொண்டோம்.

சுமார் 7-30மணிக்கு கோவிந்த்ஜீ மந்திருக்கு வந்தோம். இங்குள்ள கண்ணபிரானது மூர்த்தி மதுரையிலிருந்து கொண்டுவரப்பட்டது. ஔரங்கஸீப் மன்னரது மதவெறியால் மதுரையிலுள்ள பண்டைக் கோயில் ஒன்று தகர்ப்புண்டது; அங்கிருந்த மூர்த்தியைப் பக்தர்கள் ஜெய்ப்பூருக்குக் கொண்டு வந்து பிரதிஷ்டை செய்தனர். கோயிலில் கூட்டம் எப்போதும் அதிகம். அடியார்கள் ஆர்வமுடன் இறைவனைப் பாடி வழிபடுகின்றனர்; சிலர் கூட்டங் கூட்டமாக பஜனை செய்கின்றனர்.

"ராஜஸ்தானின் பாரிஸ்" (The Paris of Rajastan) என்று ஜெய்ப்பூர் உலகில் பிரஸித்தி வாய்ந்தது. இதிலுள்ள கடைத்தெருக்களில் அந்நிய நாட்டினர் எப்போதும் வியாபாரத்திற்கு வருகின்றனர். அழகிய முத்து மாலைகளும், பொன் நகைகளும், கல்லிழைத்த ஆபரணங்களும், சித்திர வேலைப்பாடுள்ள ஆடைகளும், வெளி நாட்டினரும் விரும்புமாறு கவர்ச்சியுடையன. வர்ண வேலைப்பாடுள்ள பித்தளைத் தாம்பாளங்களும் பாத்திரங்களும், தந்தத்தாலான சாமான்களும், மாட்டுக் கொம்பாலான உருவங்களும் மிக மிக நேர்த்தியானவை. ஆதலால் இரவு 7-30க்குப் பிறகு சில கடைகளில் இவற்றைப் பார்க்கச் சென்றோம்.

ஜெய்ப்பூரில் பின்னும் பார்க்கவேண்டியவை நகர அரண்மனை (City Palace), போதி கானா (Pothikhana), சிலே கானா (Silekhana), வான ஆராய்ச்சி நிலையம் (Astronomical Observatory), மோதி துக்ரி அரண்மனை (Moti Doogri Palace), புரானா காட் (Parana Ghat), கால்டா (Galta) முதலியன. ராஜஸ்தானிலுள்ளவர்கள் தொன்று தொட்டு தெய்வபக்தி வாய்ந்தவர்கள். ஜெய்ப்பூரில் ஆலயங்கள் பல உள்ளன. இங்குள்ள மக்கள் கொண்டாடும் திருவிழாக்கள் வஸந்த பஞ்சமி (வசந்த உத்ஸவம்), ரத ஸப்தமி, சிவராத்ரி, கங்கார் (Gangaur) அதாவது கௌரி பூஜை, விஜய தசரா—அதாவது விஜய தசமி, தீபாவளி, அன்னகூடம் அல்லது கோவர்த்தன உத்தாரணம், டீஜ் (Teej)—அதாவது பார்வதி உத்ஸவம், கணேஷ் சதுர்த்தி, மஹாராஜாவின் பிறந்த நாள் முதலியன.

இவ்வாறான பெருமை வாய்ந்த நகரில் நாங்கள் ஒரே ஒரு நாள்தான் தங்கமுடிந்தது. இந்தக் குறுகிய கால வரைக்குள் எங்களால் இயன்றவற்றைப் பார்த்துவிட்டு அன்றிரவே ரெயில்வே ஸ்டேஷனுக்குச் சென்றோம். மறு நாள் நாங்கள் ஆஜ்மீர், புஷ்கர்-இவற்றைப் பார்ப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் ஆகியிருந்தன.

# மனித ம்ருகம்

டிங்....டிங்....டிங்...என்று மூன்று முறை தன் யாழ் இசையை எழுப்பி ஓய்ந்தது கடிகாரம். நமக்கெல்லாம் அது யாழ் இசை. ஆனல்....திவாகரனிற்கு....இடி....பேரிடி அவனது மண்டை ஓடுகளை உடைத்தெறியும் ஒரு ராக்ஷசக் கருவியாக வன்றோ தோன்றியது. உலகை இருள் கவ்வி யிருந்த வேளையானதால், சப்தமே இல்லாது உறங்கிக் கொண்டிருக்கும் அச்சூழ்நிலைக்கு மணியோசை ஒன்றே எழுந்து அப்பயங்கர அமைதியைக் கிழித்தது. அமைதி யைமட்டுமா கிழித்தது? திவாகரனின் நெஞ்சையும் அல்லவா கிழித்து, அவனது மடத்தனமான செயல்களுக்கும் ஒரு உறையைத் தைத்து, அதனுள் புகுத்திவிட்டது.

இத்தனை நேரம் திவாகரனின் மன அறைக்குள்ளே வெளிவரமுடியாது, தத்தளித்துத் தவித்துத் திண்டாடிக் கொண்டிருந்த உணர்ச்சிகள் யாவும், இம்மணி யோசை யின் வலிமையால், அது ஒலித்தமாத்திரத்தில் மனக் கதவைப் பிளந்துகொண்டு, கொழித்துப் பொங்கி வெள்ள மாய் வெளியே புரண்டன.

படபடப்பும், பதைபதைப்பும், அவனைப்படுக்கவிட்ட னவா? நிலைகொள்ளாது கூண்டுப் புலியாய் இப்படியும், அப்படியும் உலாவினன். 'மூன்று....மணிமூன்று...ஐயோ. இதே மூன்று மணி. 12 மணி நேரம்தான் ஆகின்றது. நேற்று மத்தியானம்தான் என்ன காரியம் செய்து விட்டேன். பாவம், அவனக இருக்கவே பொறுத்துக் கொண்டான். வேறு மனிதனுய் இருந்தால்...நேற்று என் கதி எப்படி சந்தி சிரித்திருக்கும். முதலில் ஒரு காரியத்தை ஆத்திரத்துடன் செய்துவிடுவது பிறகு வருந்தி வாடுவது. இதுதானே மனித சமுதாயத்தின் பரம்பரை தொத்து வ்யாதியாகி பின் சந்ததிகளையும் கைபற்றுகிறது. செய்தது செய்தாகிவிட்டது. இதற்கு ப்ராயசித்தம் என்ன செய்ய லாம்"என்று அவன் மனதை அவனே துளைத்துக் கொண் டான்.

'டேய்! உனக்கு என்ன முடை இப்போது? குடும்பம் பெரியதா அல்லது வருமானம் குறைந்ததா? இரண்டும் இல்லையே. பணம் இறக்கைக் கட்டிக்கொண்டு பறக்கிறது. எவ்வழியில் செலவழிக்கலாம் என்று யோசிக்கிருய். இப்படி இருக்கையில் உனக்கு ஏன் கருமித்தனம். பணத் தையும், நிம்மதியையும் கொடுத்த கடவுள் உனக்கு ஏன் தாராள மனதைக் கொடுக்கவில்லை? பணமாம் பணம்,

ஒரே ஒரு 1000 ரூபாய். அது உனக்கு பிச்சைக்காசு அளவுதானே! அவன் எவ்வளவு வினயமாகக் கடிதம் எழுதினான். அதை வைத்துக்கொண்டு, "ஓஹோ கடிதம் எழுதி கண்ணைத் துடைக்கப்பார்க்கிறான்." என்று வாய் விட்டு கூறியவன், அவனை எந்த வழியில் மடக்கலாம் என்று சதியாலோசனை புரிந்து கொண்டிருந்தாயே. உன் மனதில் புதியவிடை பளிச்சிட்டதுபோலும் கையை தட்டி குதித்தாயே. அந்த சந்தோஷத்தில், சமையல்காரி கூப்பிடுவதாவது உன் காதில் விழுந்ததா. பணம் என்றதும் உனக்கு சர்ப்பாடுகூட வேண்டியிருக்கவில்லை. சாப்பிடாது ஓடினாயே. என்ன பலன் கிடைத்தது. ஒரு அப்பாவி மனிதனை இப்படி கண்ணில் விரலைவிட்டு ஆட்டவா அப்படி ஓடினாய்? நல்ல மனிதர்....பெரிய குடும்பத்தின் பொறுப்பாளி. கொடுக்காது ஏமாற்றி விடுவாரா. நேற்று நீ செய்த செயல் 'உன்' தலைமுறைக்கும் உன்னைப் பின் தொடர்ந்து ஹிம்ஸிக்கும் நினைவிருக்கட்டும்' என்று உள் மனது அவனைக் கண்டித்து சிரித்து, எக்காளமிட்டு, சித்திர வதை செய்தது.

இரவு நீண்டுகொண்டேபோவதுபோல் அவனுக்கு ஒரு ப்ரமை. பொழுது புலராதா? என்ற ஏக்கப் பெருமூச்சுடன் எதிர்பார்த்து அமர்ந்திருந்தான். அவன் வரவேற்கத் தயாராயிருந்த பொழுதும் பலபல வென விடிந்தது.

காலைக்கடன்களைக்கூட முடிக்காது, அவசர அவசரமாக தன் ப்ராயசித்தத்தைதீர்த்துக்கொள்ள ஓடினான். பல தெருவுகளில் நுழைந்து புறப்பட்டு ஒரு சாதாரண, எளிய வீட்டின் முன்போய் நின்றான். அவனுக்குத் தூக்கி வாரி போட்டது. அவ்வீட்டுக் கதவில் தொங்கிய பூட்டு, அவனைப் பார்த்து சிரிப்பது போலவும், முறைத்து சாபமிடுவது போலவும் பல காட்சிகள் பின்னப்பட்டு விசுவரூபம் எடுத்து, அவன் உடலை ஒரே வெட்டாக வெட்டின. தூக்கு மேடையில் நிற்கும் கைதியைப்போல் மருண்ட பார்வையுடன் சிறிது நேரம் ஸ்தம்பித்து நின்றான்.

வீட்டிற்கு திரும்பவும் பிடிக்கவில்லை, அங்கிருந்து மட்டும் என்ன ப்ரயோஜனம். வீட்டின் சாயலிலிருந்து அவர்கள் குடும்பத்தோடு எங்கோ ப்ரயாணமாகிவிட்டார்கள் என்பது மட்டும் புலனாகியது. அக்கம் பக்கத்திலுள்ளவர்களை விசாரிக்கலாம் என்றால், தன்னையே ஏதாவது செய்துவிட்டால்...என்ற பயமும் உள்ளூர வதைத்தது. இருந்தாலும் கேட்டுவிடுவோம் என்று தைரியத்தை பிடித்து கட்டியிழுத்து அவர்களுடன் உரையாட முன் வந்தான்.

"ஏம்பா! இந்த வீட்டில் அநேக வருஷமாகக் குடியிருந்தாரே கந்தசாமி அவர் எங்கே போயிருக்கிறார். வீட்டில் வேறு யாரும் இல்லையா? வீடு பூட்டியிருக்கிறதே" என்று ஒன்றும் அறியாதவன்போல் அவன் வாயைக் கிளறினான்,

"பாவம்! அவரையா கேட்கிறீங்க. ரொம்ப நல்ல மனிதர். மானி கண்ணியமாய் வாழுகிறவர். அப்படிப்பட்ட புண்ணியவானை ஏதோ ஒரு கழுதை, அவருக்குப் பணம் கொடுத்தவனாம். அதை நயமாய் கேட்டு வாங்காமல், நேற்று வந்து இரைந்து ஒரே ரகளைசெய்து, கந்தசாமியை ஒரு அடியும் வைத்துவிட்டானாம். அதனால் அம்மனிதர், பிள்ளை குட்டிகளையும், மனைவியையும் எங்கோ ஒரு கிராமத்திற்கு அனுப்பிவிட்டு மீதி இருந்த சிலவற்றையும் எடுத்துக் கொண்டு போனார். அதைவிற்று, பணத்தை அந்த கஞமி, கஞ்சன் முகத்தில் வீசிவிட்டு, ஈரத்துணியை வயிற்றில் மடித்துப் போட்டுக்கொண்டு போகப்போறாரு பாவம்". என்று அனுதாபத்தோடு ஒரு மனிதன் விஷயத்தை விளக்கினான். அவன் கூறும் ஒவ்வொரு வார்த்தையும் அவன் கன்னத்தில் 'சுளீர்...சுளீர்....என்று விழும் அடியாகவேத் தோன்றியது. 'அவ்வார்த்தையே நமக்கு இப்படி வதைக்கையில் அந்த அப்பாவி மனிதரை, என் சொல்லம்பாலும் இரக்கமின்றி என் முரட்டுக் கையாலும் அடித்தேனே அது அவரை எப்படி வாட்டியிருக்கும்' என்று அப்போதுதான் திவாகரனால் உணர முடிந்தது. தன் முகத்தில் படரும் உணர்ச்சிகளைக் கண்டு நம்மை சந்தேகிக்க நேரிடப் போகிறதே என்று மேலே பேச்சைத் தொடர்ந்தான்.

"ஏனப்பா! அவர் எந்த இடத்திற்குப் போயிருக்கிறார். எப்போதுவருவார் என்பது உங்களுக்குத் தெரியுமா? நான் ஒரு முக்யமான விஷயம் பேசவேண்டும் அவருடன்"

"எங்களுக்கு விவரம் ஒன்றும் தெரியாது. அந்த மனிதன் இருக்கும் நிலையைப் பார்த்தால் தற்கொலை செய்துக் கொள்ளாது இருக்கவேண்டுமே என்று நினைத்து நாங்கள் வருந்தி கொண்டிருக்கிறோம்." என்றவன் தன் வேலையை கவனிக்கஎழுந்துபோனான்.

திவாகரனிற்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. இன்றைக்கு எப்படியாவது அம்மனிதரைப் பார்க்காது வீடு திரும்புவதில்லை என்ற தீர்மானத்துடன், பூட்டியிருந்த அவ்வீட்டின் திண்ணையிலேயே போய் அமர்ந்தான். 'தற்கொலை' என்ற சொல்லே அவன் முன் காட்சியளித்து பேய் ஆட்டம் ஆடியது.

"ஐயோ! பாவம். நம் காட்டுமிராண்டிதனத்தால் நடு நடுங்கி குடும்பத்தையே எங்கோ அனுப்பிவிட்டானே. பணத்தை வீசிவிட்டு அவர்கள் நினைப்பதுபோல் தற்கொலை....அப்ப நினைக்கும்போதே நடுங்குகிறதே, அப் பாவம் என்னைத்தானே பிடித்தாட்டும். அவன் குடும்பத்தாரின் வயிற்றெரிச்சல், சாபம் எல்லாம்...." அதற்குமேல் நினைக்க அவனுல் முடியவில்லை. நேரமோ ஓடிக்கொண்டே இருந்தது. வெய்யலின் கனல், அனல் வீசி அவனை வறுத்தது. பூமிதேவியைப் பார்த்த வண்ணம் அமர்ந்திருந்தான்.

"சூ! அப்பாடா. என்ன வெய்யில்" என்ற குரலைத் தொடர்ந்து காலடி ஓசை நெருங்கிக் கேட்டது. தபஸிலிருந்து கலைக்கப்பட்ட ஞானியைப்போல் திடுகிட்டு எதிரே நோக்கினுன்.

கந்தசாமி!—கண் கண்டது.

கந்தசாமி!—மனம் முணுமுணுத்தது.

"கந்தசாமீ!"—என்ற அலறலை வாய் வெளியிட்டது.

தலை குனிந்த வண்ணம் வந்து கொண்டிருந்த கந்தசாமி என்ற அம்மனிதன் நிமிர்ந்தான். திவாகரனைக் கண்டதும் அவன் முகம் ஆத்திரத்தால் சிவந்தது. "ஏன் ஐயா! உன்னைப்போல் நான் மட்ட ரகத்தைச் சேர்ந்தவனல்ல. உன் வீடுவந்து பணத்தை வீசி எறிவேன். அதற்குள் எங்கு ஏமாற்றி விடுவேனே என்று பயமா? பிடி உன் பணத்தை" என்று பல நோட்டுகள் நிறைந்திருந்த கையை நீட்டினுன்.

திவாகரனுக்கு பேசதோன்றுகிறது. பேசவும் பேசுகிருன். ஆனல் வார்த்தைகள் சப்தத்துடன் வெளிவராமல் நெஞ்சிலேயே தட்டி நின்றுவிட்டது. தவறை உணர்ந்தும் இப்படிபட்ட வார்த்தைகள் அம்மனிதனிடமிருந்து வெளிவந்தது அவனது துக்கத்தைக் கிளறிவிட்டது. அழுகைதான் வந்தது.

கண்ணீர் பெருக அம்மனிதன் கைகளைப் பிடித்துக் கொண்டு "கந்தசாமி! என்னை மன்னித்துவிடு. பணம் என்ருல் பிணமும் வாயைத் திறக்குமல்லவா!' நான் என் தவறை நன்ருக உணர்ந்துவிட்டேன். இந்த பணம்எனக்கு வேண்டாம். நீ உன் குடும்பத்தை முதலில் கடிதம் எழுதி இங்கு வருவித்துவிடு. இப்பணத்தை அவர்கள் சந்தோஷமாயிருக்க செலவுசெய். எப்போதாவது உனக்கு உதவி தேவையாய் இருந்தாலும் என்னை தாராளமாகக் கேள். நான் செய்கிறேன்." என்று படபடக்கக் கூறினுன்.

[தொடர்ச்சி 24-ம் பக்கம் பார்க்க]

# ஹிந்து சட்ட மாறுதல்கள்

ஸ்ரீமான். P. M. ஸ்ரீநிவாஸ ஐயங்கார், B.A., M.L.
(Retd. Dist. Judge.)

[குறிப்பு: 1-6-57-ல் வெளிவந்த ஜகன்மோகினியின் 6-வது இதழின் 14, 15, 16 பக்கங்களிலிருக்கும் தத்துஸ்வீகாரத்தை பற்றிய வியாசத்தில் 15-ம் பக்கம் 18-வது வரியில் "அவன் அவனைவிட 21 வருஷமாவது பெரியவனாக இருக்கவேண்டும்" என்பதை அவள் அவனைவிட 21 வயதாவது பெரியவளாக இருக்கவேண்டும்" என்று திருத்திக்கொள்ள வேண்டும். சட்டத்தின் தாத்பர்யமென்னவென்றால் ஒரு புருஷன் ஒரு பெண்ணை ஸ்வீகாரம் செய்துகொள்ள, அந்த பெண் அவனைவிடவும், ஒரு ஸ்திரீ ஒரு பிள்ளையை ஸ்வீகாரம் செய்துகொள்ள அந்த பிள்ளை அவளைவிடவும் குறைந்தது 21 வயது குறைச்சலாக யிருக்கவேண்டும். அப்படியிருந்தால் தான் ஸ்வீகாரமான பிள்ளைக்கோ பெண்ணிற்கோ ஸ்வீகாரமெடுத்து கொண்டவரிடத்தில் தாய் தந்தை என்ற மனப்பான்மையிருக்கும்.]

இந்தியா பார்லமெண்டுனால் செய்யப்பட்ட சட்டங்களில் ஜனங்களுடைய பழக்கங்களை விசேஷமாக மாற்றியது சட்டம் நெ. 30, 1956. அது ஹிந்துக்களில் வார்சுகிரமத்தை பற்றியது. 17-6-1956 லிருந்து அமலிலிருக்கிறது. அது இந்தியா தேசத்தில் ஸகல ஹிந்துக்களுக்கும், மற்றுமுள்ள பௌத்தர், ஜைனர், சீக்குகளுக்கும் அன்வயிக்கும். அதாவது, முஸ்லிம், கிறிஸ்து, பார்சி, ஜ்யூமதங்களை தழுவாதவர்கள் எல்லோரும் டி சட்டத்திற்குள்படுவார்கள். மதாந்தரத்தைச் சேர்ந்து மறுபடியும் ஹிந்து, பௌத்த, ஜைன, சீக்குமதங்களை தழுவுகிறவர்களுக்கும் வர்த்திக்கும்.

முதலில் சட்டத்தின் முக்கிய அம்சங்களைக் காட்டி, அதன் பிறகு ஒவ்வொருவருடைய, அதாவது பிள்ளை, பெண், பத்னி, தாய், தந்தை, உடன் பிறந்தவர்கள், விஷயத்தில் சட்டத்தினாலேற்பட்ட மாறுதல்களை விளக்கம் செய்கிறோம்.

ஒரு புருஷன் இறந்தால் அவன் சொத்திற்கு வார்சுகள் இரண்டு வகுப்பாக பிரிக்கபட்டிருக்கிறார்கள். முதல் வகுப்பிலுள்ளவர். யார் ஜீவந்தராக யிருக்கிறார்களோ, அவர்களெல்லோரும் ஆஸ்தியை அடைவார்கள். முதல் வகுப்பாரரும் புருஷனிறக்கும் காலத்திலில்லாவிடில், இரண்டாவது வகுப்பினர் வார்சுகளாவார்கள். அந்த இரண்டாவது வகுப்பில் 9 உள் பிரிவுகளிருக்கின்றன. முதல் பிரிவினர் இல்லாவிடில் இரண்டாவது பிரிவில் இருப்பவர்கள் சொத்தை அடைவார்கள். இரண்டாவது பிரிவிலும் யாருமில்லாமலிருந்தால் 3 வது பிரிவினர் அடைவார்கள். அம்மாதிரி கடைசி பிரிவுவரை போகும்.


### முதல் வகுப்புவார்சுகள்

பிள்ளை; பெண்; பத்னி; தாய்; தகப்பனுக்கு முன்னமேயே இறந்த பிள்ளையின் பிள்ளை (அதாவது பௌத்திரன்); தகப்

183211

பனுக்குமுன் இறந்த பெண்ணின் பிள்ளை, அவன் பெண், தகப்பனுக்கு முன் இறந்த பிள்ளையின் மனைவி, பிதாவும், பிதாமகனும் இறந்துபோன பிரபௌத்ரன் (கொள்பேரன்) அப்பேர்பட்ட கொள்பேத்தி பிதாவும், பிதாமகனும் முன்னமேயே இறந்திருந்து அந்த பௌத்திரனுடைய மனைவி (விதந்து).

ஷை வார்சுகள் 1 முதல் 12 வரை லக்கங்களால் கீழ் வரைந்த வம்ச வ்ருக்ஷத்தில் விவரமறிவதற்காக காட்டப்பட்டிருக்கிறார்கள்.




1 முதல் 12 வரை லக்கங்களால் குறிக்கப்பட்டவர்களில், மூல புருஷன் போகும்போது யார் உயிருடனிருக்கிறார்களோ அவர்கள் வார்சுகள், இறந்தவனுடைய சொத்தை பங்கிடு செய்வதில் கீழ்கண்ட விதிகளை அனுசரிக்கவேண்டும்.

(a) இறந்தவனுக்கு ஒரு பத்னிதான் யிருந்தால் அவள் ஒரு பாகத்தை அடைவாள். பல பத்னிகளிருந்தால் அவர்களெல்லோரும் சேர்ந்து 1 பங்குதான் அடைந்து அதை அவர்கள் தங்களுக்குள் சமமாக பங்கிட்டுக்கொள்ள வேண்டும்.

(b) இறந்தவன் இறக்கும்போது ஜீவித்திருக்கும் பிள்ளைகள், பெண்கள், தாய், ஒவ்வொரும் தனித்தனியாக ஒரு பங்கு அடைவார்கள்.

(c) இறந்தவனுக்கு முன்பே இறந்த அவன் பிள்ளை; பெண் இவர்களுடைய மேற்கண்ட வார்சுகள், இறந்த பிள்ளைக்கோ பெண்ணுக்கோ யுள்ள ஒரு பாகத்தை தங்களுக்குள் பங்கிடு செய்து கொள்ளவேண்டும்.

மேல்வரைந்த விருக்ஷத்தில், மூல புருஷனிறந்தபோது லக்கமிட்ட 1 முதல் 12 வரையுள்ளவர்களெல்லோரும் ஜீவித்திருந்தார்களென்று வைத்துக்கொள்வோம். அப்பொழுது, நபர்கள் 1, 2, 3, 4, ஒவ்வொருவரும், 5, 6, 9, 10, 11, 12 மொத்தத்திலும், 7, 8ம் மொத்தத்திலும் சொத்தை சமமாகப் பிரித்துக்கொள்ள வேண்டும். அதாவது 6 சமபாகங்களாகப் பிரிக்கவேண்டும். நபர்கள் 1, 2, 3, 4 ஒவ்வொரு பாகமும், 5, 6, 9, 10, 11, 12 நபர்கள் ஒரு பாகமும், 7, 8 நபர்கள் ஒருபாகமும் அடைவார்கள். 5, 6, 9 நபர்களில் ஒவ்வொருவரும், 12, 10, 11 சேர்ந்தும் தங்கள் சாகைக்கு வந்த ஒரு பாகத்தை 4 சமபாகங்களாகப் பிரித்துக் கொள்ள வேண்டும். அம்மாதிரியே 7, 8 லக்கமுள்ள நபர்கள் தங்கள் சாகையின் ஒரு பாகத்தை தங்களுக்குள் சமமாகப் பங்கிட்டு கொள்வார்கள்.

மேற் முதல் வகுப்பில் யாருமில்லாமலிருந்தால் கீழ்க்கண்ட இரண்டாவது வகுப்பில் உள்பிரிவுகள் 1 முதல் 9 வரையிலுள்ளவர்கள் உள்பிரிவு கிரமத்தில் சொத்தையடைவார்கள்.

### இரண்டாவது வகுப்பு வார்சுகள்

I தகப்பன் (அதாவது யார் இறந்து அவனுடைய சொத்து தாயவிபாகம் பிரஸ்துதமோ அவனுடைய தகப்பன் அப்படியே கீழ்கண்ட இனங்களையும் அன்வயித்துக் கொள்க.)

II (1) பிள்ளையின் பெண்ணுடைய பிள்ளை, (2) பெண்ணின் பிள்ளையுடையப் பெண், (3) தௌகித்திரியின் பிள்ளை, (4) தௌகித்திரியின் பெண்.

III (1) பிள்ளையின் பெண்ணுடைய (பௌத்திரியின்) பிள்ளை;
(2) பெண்ணின் பிள்ளை (தௌகித்திரனின்) பெண்;
(3) பெண்ணின் பெண்ணுடைய பிள்ளை;
(4) பெண்ணின் பெண்ணுடைய பெண்.

IV (1) சகோதரனின் பிள்ளை, (2) சகோதரியின் பிள்ளை.
(3) சகோதரனின் பெண், (4) சகோதரியின் பெண்.

V தகப்பனின் தகப்பன் (பிதாமகன்); தகப்பனின் தாய் (பிதாமகி).

VI தகப்பனின் மனைவி; சகோதரனின் மனைவி.

VII தகப்பனின் கூடப்பிறந்தவன்; தகப்பனின் கூடப் பிறந்தவள்.

VIII தாயின் தகப்பன் (மாதாமகன்); தாயின் தாய் (மாதாமகி).

IX தாயின் சகோதரன் (அம்மான்); தாயின் சகோதரி.

மேல் 9 பிரிவுகளில், மேற்பிரிவில் ஒருவரும் ஜீவித்தில்லாமலிருந்தால் அதற்கடுத்த கீழ் பிரிவு நபர்களுக்குவார்சு தன்மை

வரும். முதல் உள்பிரிவில் தகப்பன் ஒருவன்தான். மற்ற உள் பிரிவுகளில் ஒவ்வொன்றிலும் பல நபர்களிருக்கிறார்கள். எந்த உள்பிரிவு வார்சு முறையாகின்றதோ, அப்பிரிவிலிருக்கும் எல்லா நபர்களும் ஆஸ்தியை சமமாக அடைவார்கள்.

ஒருவன் இறந்தபொழுது, அவனுக்கு முதல், இரண்டு வகுப்புகளில் காட்டப்பட்ட இனத்தார் ஒருவராவது இல்லாம லிருந்தால் அவன் சொத்து அவனுடைய ஞாதிகளும், ஞாதிகளு மில்லாமலிருந்தால் அவன் பந்துக்களும் அடைவார்கள். ஞாதிக ளென்றால் இறந்த புருஷனுக்கு புருஷ வரிசையிலேயே தோற்று கிறவர்கள். பந்துக்களென்றால் புருஷர்களும் ஸ்திரீகளும் மிச்ரமமான வரிசையிலிருக்கிறவர்கள். ஷை 1, 2 வகுப்புகளிலிருக் கிறவர்கள் மேற்கூறிய ஞாதிகளாவது பந்துக்களாவது ஆகமாட் டார்கள். ஷை 1, 2 வகுப்புகளில் இருப்பதே அவர்கள் வார்சு களாக இருந்து சொத்தையடைய போதுமான காரணமாகும்.

பல ஞாதிகளோ, பந்துக்களோ இருந்தால் அவர்களில் இறந்தவனுக்கு யார் சந்நிகிதமோ அவன் வார்சாவான். அதை யறியும் வழி, இறந்தவனிடமிருந்து ஆரோகணத்திலேயோ அவரோகணத்திலேயோ, அல்லது இரண்டு வழியாலேயோ புருஷாந்தரங்கள் எண்ணி, எவனது குறைவு எண்ணோ அவன் சந்நிகித வார்சாகுவான்.

(தொடரும்)

---

[20ம் பக்கத் தொடர்ச்சி]

கந்தசாமி பதிலே கூறாது பிரமித்து நின்றுவிட்டான். 'என்ன இது! நேற்று இங்கு வந்து செய்த ஆர்பாட்ட மென்ன, இன்று பேசுவது என்ன? ஒரே குழப்பமாயிருக் கிறதே' என்று வியந்தவாறு நின்றிருந்தான்.

"கந்தசாமி! இதென்ன திடீர் மாறுட்டம் என்று வியக் கிறாயா? தக்க சமயத்தில் இந்த ம்ருகத்தை மனிதனாக்கினார் அந்த கடவுள். இப்போதாவது புத்தி வந்ததே. இன்னும் சற்று போயிருந்தால், நீ தற்கொலை புரிந்து கொண்ட பாப மும் என்னைச் சேர்ந்திருக்கும். அதிலிருந்து தப்பினேன். என்னை ஒரு வார்த்தை மன்னித்தேன் என்று சொல் கந்தசாமி....சொல்"

"அதெல்லாம் வேண்டாமுங்க. உங்களுக்கு இவ்வளவு ச்ரமம் கொடுத்ததற்கு மன்னிக்கவேண்டும்" என்றுதான் அப்போதும் அவன் கூறினான்.

திவாகரன் கந்தசாமி முதுகில் தட்டிக் கொடுத்தவாறு "நான் வருகிறேன். ஒழிந்தபோது வீட்டிற்குவா நிதான மாகப் பேசலாம்" என்று கூறினான். பிறகு வீட்டை நோக்கி நாண்டு நடைபோட்டான்.

அவன் காலையிலிருந்து சாப்பிடாதது கூட அவனை வருத்தவில்லை. இப்போது செய்த காரியந்தான் மனத் தோடு, வயிற்றையும் நிறைத்துவிட்டதே!




நடந்தது முழுவதையும் எண்ணிப் பார்த்த முத்து ஒரு முடிவுக்கு வந்தவனாய், "வள்ளி! முதலில் நான் இங்கே ஒரு நாள் தங்கிட்டுப் போகலாம்னு பார்த்தேன். வீட்டிலே என்னவோ கலாட்டா செய்ய ரகு இல்லை. ரேவதியும் இல்லாத அம்மா தனியா திண்டாட்றபோது இங்கு இருக்கக் கூடாது. சதாசிவ ஐயா வந்ததும் பேசிட்டு, வூட்டுக்குப் போயிடலாம். அம்மாக்குக் கொஞ்சம் ஆறுதலா இருக்கும்" என்றான்.

பாவம்! வள்ளி என்ன செய்வாள். 'பட்டுகூட எத்தனை சொன்னாலும் தெரியவில்லையே. இன்னும் என்ன என்ன நடக்கவேணுமோ!' என்ற கிலியை சுமந்துகொண்டு, குழந்தையுடன் பின்புறம் போய் அமர்ந்தாள். யோசிக்கவும் தெரியவில்லை. பேசாமல் இருக்கவும் முடியவில்லை. மனதைக் குழப்பிக் கொண்டு, ஆகாயத்தை அண்ணாந்து நோக்கியவாறு அமர்ந்தாள்.

---

## அத்தியாயம்—15.

### *அதிகப்ரசங்கியும்—மடைப்ரசங்கியும்*

சரோஜா தன் மனதை ஒரு நிலையில் நிற்கவைக்க முடியாது குட்டியிட்ட பூனைபோல் உள்ளிற்கும் வெளியிற்குமாக அலைந்து கொண்டிருந்தாள்.

உள்ளே வந்தபோது லக்ஷ்மியின் நிலையைக் கண்டு குழம்பினாள். 'என்னடா இது, சதாசிவம் தாத்தா போய் இத்தனை நேரமாகியும், இந்த அம்மா அப்படியே உட்கார்ந்து அழுதுகொண்டிருக்கிறாளே. ஏதாவது சாப்பிட்டாளா என்றும் தெரியவில்லை. எனக்கு பசியோ தாங்கவில்லை. அம்மா சாப்பிடாது சாப்பிடவும் பிடிக்கவில்லை. கூப்பிட்டால் திட்டுவாளோ' என்று தன் மூளையை குடைந்து விடை தேடிக்கொண்டிருந்தாள்.

நேராக மாடிக்குச் சென்று, ரகுவின் அறையில் நுழைந்தாள். "தூ! இதன் புத்திக்கேற்ப, அறையை எப்படி தாறுமாறாக சாமான்களைப் போட்டு கோரப்படுத்தி வைத்திருக்கிறது. ஹூம்....அது போனதிலிருந்து வீடு சண்டை, கூச்சல் இல்லாமல் நன்றாக இருக்கிறதே என்று பார்த்தால், அம்மா அழுமூஞ்சியாக மாறிவிட்டாளே'' 'வாலு போச்சு கத்தி வந்தது' கதையாகத்தான் இருக்கிறது எல்லாம்'' என்று தன் குறை தீர வாய்விட்டே கூறினாள்.

தன் திட்டத்தின்படி முதலில் ரேவதியின் அறையையும், பிறகு ரஞ்சனின் அறையையும் கவனித்தாள். "இவள் மோசமில்லை. சுத்தமாகத்தான், ஒழுங்காக வைத்திருக்கிறாள். இப்படியே இவள் குணமும் மனமும் சுத்தமாக இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும். அன்றைக்கு ஒருநாள் தன் அம்மா படத்திற்கு 'பூ' சூட்டியவள்தான். உலர்ந்து உதிர்ந்துகொண்டிருக்கும் அதை எடுத்து போடக்கூட ஒழியவில்லை. அந்த விளக்கைத் தேய்த்து எத்தனை நாளாயிற்றோ. தேய்ப்பதற்குப் போவானேன், ஏற்றியே எத்தனை நாளாயிற்றோ'' என்று முணுமுணுத்தாள்.

பிறகு "அப்ப....என்ன காற்று ஜிலு....ஜிலுவென்று வீசுகிறது. ரஞ்சன் அண்ணா அறைக்கு வந்தால் ஒரு நிமிஷம் உட்கார்ந்துவிட்டு போனால்தான் நிம்மதி. ரகு, ரேவதி சண்டையிலேயே நாள் போவது தெரியாது மாசமாய் ஓடிக்கொண்டிருக்கிறது. பகவானே! இனிமேலாவது சண்டை, கிண்டை இல்லாத நாளை ஓட்டி சீக்கிரம் ரஞ்சன் அண்ணா திரும்பி ஓடிவந்து என்னைக் கொஞ்சவேண்டும். எனக்கு என்ன என்னவோ பொம்மை சாமான், எல்லாம் வாங்கி வரவேண்டும்'' என்று குழந்தைகளுக்கிருக்கவேண்டிய சிறிது சுயநலம் கூடிய வார்த்தைகளோடு தன் ப்ரார்த்தனையைச் செலுத்தினாள்.

தன் வீட்டில் நவகிரகம்போல் ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதத்தில் வக்கரித்துக் கொண்டிருப்பதை நினைத்ததும், அவளை அறியாமல் அவள் கண்கள் நீரை ஊற்றின. கண்களைத் துடைத்தவாறே கீழே கையிலிருக்கும் புத்தகத்தில் கண்களையும், சிந்தனையை வேறிடத்திலும் பறிகொடுத்துவிட்டு திண்டாடும், இவளது அன்பிற்கும் பாத்திரமான வாஸுவிடம் சென்றாள்.

'ஹூம்' என்று பாட்டிபோல் பெருமூச்சிட்டுக்கொண்டு, காலை நீட்டியவாறு அமர்ந்த சரோஜாவை

பார்த்த வாஸு, "சரோ! அழுகிறாயா என்ன? ஏம்மா" என்றான்.

அவன் கேள்வி அழுகையை அதிகமாக்கியதோடில்லாமல், கோபத்தையும் கிளப்பிவிட்டது. "ஏன்?...கேள்வி பலே பேஷ்....நம் வீடு இருக்கும் நிலையைப் பார்த்தால் உனக்கு அழுகை வரவில்லை. உனக்கு ஏது துக்கம். நீயும் பெண்ணாய் பிறந்திருந்தால் முசுமுசுவென்று அழுவாய். நீ ஒரு ஆண் கட்டை, அதுவும் ரகுவின் தம்பியில்லையா. உனக்கு ஏதுடா....இதெல்லாம்..." என்று பொரிந்து தள்ளினாள்.

"சரோ! சரோ! என்ன இது...உனக்கு திடீரென்று இப்படி வந்துவிட்டது கோபம். ஓ!....என்று ஒப்பாரிவைத்தால்தான் துக்கம் இருக்கிறது என்று அர்த்தமா,.... எனக்கு ஒன்றுமே இல்லையா...நான் உன்னைவிட பெரியவனாகையால் மனதிற்குள்ளேயே வைத்துக்கொண்டிருக்கிறேன். நீ தாங்காது அழுகிறாய்."

"உம்...நான் தாங்காது அழுகிறேன். நீ தாங்கிக்கொண்டு ஜம்மென்று உட்கார்ந்திருக்கிறாய். போடா... அளப்பு."

"அளப்புதான். என் நிலையைப் பார்த்துகூட உனக்குத் தெரியவில்லை. புத்தகம் படிக்கிறானே தவிர ஒன்றாவது மனதில் நிற்கிறதா, அல்லது புரியதான் புரிகிறதா? எதுவும் செய்ய முடியாது நான் தவிக்கும் தவிப்பு எனக்குதானே தெரியும். உன்னைப்போல் வீட்டை சுற்றிக்கொண்..."

"ஹும்...என்ன சொன்னாய். வீட்டையா சுற்றுகிறேன். அம்மாவைக் கூப்பிடவும் பயமாய் இருந்தது. வேறு வேலை செய்யவும், நீ சொல்வதுபோலதான் ஓடவில்லை. மேலே போய் மூன்று பேர் அறையையும் பார்த்தேன். அழுகை வந்துவிட்டது."

"என்ன செய்வது....சரி சரோ....நீயும் அம்மாவோடு சேர்ந்து அழ ஆரம்பித்துவிட்டால் அது எப்படி என்று கேட்கிறேன்?"

"வாஸு! நீ அம்மா முகத்தைப் பார்த்தாயா? ராத்திரியெல்லாம் தூங்காது, அழுதிருக்கிறாள். அதனால் முகமெல்லாம் உப்பி, கண் சிவந்து எப்படி இருக்கிறாள். பாவமாயில்லை" என்று கூறி அழுதுவிட்டாள்.

"சரோ! நீ சமர்த்தா இல்லையா? நீதான் இந்த வீட்டிலேயே கெட்டிக்காரி. அம்மாவின் கஷ்டத்தைப்போக்கி,

எப்படி வீட்டை சீர்படுத்தலாம் என்று யோசியாமல் கோழைபோல் அழுகிறாயே."

அவளை சிறிது முகஸ்துதி செய்யவே சாதாரணமாக மறுபடியும் பேச ஆரம்பித்தான்.

"எனக்கு எல்லாம் புரிந்துவிடும் அப்படிபட்டவளுக்கே ஒன்றும் புரியவேயில்லை. சதாசிவம் தாத்தா வந்தார். அவர் என்ன சொன்னாரோ தெரியவில்லை அம்மா, எப்படி கத்தினாள். நாம் ஓடிப்போனோமே... உனக்கு ஏதாவது தெரிகிறதா வாஸு!"

"ஒரு வேளை.... ரகுவை.... எங்கிருக்கிறான் என்று கண்டு பிடித்து விட்டாரோ என்னவோ."

"இருக்கலாம்.... ரேவதியும்... வாலை அவிழ்த்துவிட்டு... ரவாணு கிளம்பிவிட்டாள்.... வாஸு! ஒரு யோசனை இங்கு நடந்ததைதான் ரஞ்சனுக்கு எட்டவிடக்கூடாது என்று அம்மா சொன்னாள். அது இல்லாமல்... 'உன்னைப் பிரிந்து இருக்க முடியவில்லை, சீக்கிரம் வந்துவிடு என்று நீயும் நானும் கடிதம்எழுதி போட்டு விடலாம் என்ன?"

"அதெல்லாம் வேண்டாம்.... அவன் வந்தாலும் இங்கு யாரும் அடங்கமாட்டார்கள். அவன் வேலையும் கெடும். சதாசிவத்தாத்தா வழி செய்வார். நாம் ஏன் குழம்ப வேண்டும்."

"எதை நினைத்தாலும் குழப்பம்தான். அப்பா இருந்த வரை இந்த வீடு பெயருக்கேற்ப 'ஆனந்தபவன'மாகத் தான் இருந்தது. இப்போது குழப்பம்தான் நிறைந்திருப்பதால் 'குழப்ப பவனம்' என்று பெயரை மாற்றிவிடலாம் போல் எரிச்சலும், வெறுப்புமாக இருக்கிறது."

இப்படி தங்களுக்குத் தெரிந்தவிதத்தில் குறைகூறி வருந்தி கொண்டிருந்தனர். அவர்கள் கண்களில் நீர் துளி மிதந்ததோடு, சிறுவர்களாயினும் அவர்கள் முகத்தில் கவலையின் ரேறியும், சோகத்தின் இழைகளும் ஓடிக்கொண்டிருந்தது பார்ப்போருக்கு பள்ளென தெரிந்தது.

அச்சமயம்தான், முத்துவும், வள்ளியும், குழந்தையோடு வந்தனர். குழந்தைகளின் முகத்தைக் கவனித்த முத்து உருகிவிட்டான். பேச்சற்று நின்றான். வள்ளி பேசவே இல்லை. அவளுக்குத்தான் இங்கு வருவதிலே கோபமாயிற்றே.

சரோஜாவும் வாஸுவும் தங்கள் துக்கத்தை காற்றில் பறக்கவிட்டனர். ஓடிவந்து "முத்து! வள்ளி! ஐ...குட்டி

தேவகிகூட ஜோராயிருக்காளே...." என்று கட்டிக்கொண்டனர்.

"முத்தூ! இப்பதான் ஊரிலிருந்து வருகிறாயா? இனிமே போகமாட்டாயே! நீ இல்லாத ரொம்ப கஷ்டபட்டு தவித்தோம் இந்த சமயம் உன்னை கடவுள்தான் கொண்டுவிட்டார்"—என்று சரோஜா சந்தோஷத்தைக் கூறி வரவேற்றாள்.

முத்து ஒருவிதமாக வள்ளியைத் திரும்பிப்பார்த்தான். அதில் 'நீ வரமாட்டேன் என்றாயே குழந்தைகூட நம் வரவால் எப்படி நிம்மதி அடைகிறது பார்த்தாயா! நான் சொன்னது சரிதானே' என்பதுபோல் இருந்தது. வள்ளி முகத்தைத் திருப்பிக்கொண்டாள்.

"என்ன பேசமாட்டாயாவள்ளி? ...என்னவோபோல் இருக்கிறாயே" என்று வாஸுவும் பேசிவிட்டான்.

"வாஸு!....இதோ பாரேன் ரகு முத்துவின் பல்லை எல்லாம் உதிர்த்து கிழவனாக்கி விட்டான். நன்றாகவே இல்லை முகம். இதுதான் வள்ளியின் கோபத்திற்குக் காரணம்."

"அதெல்லாமில்லேமா....வண்டி வந்தது அலுப்பு, அவ்வளோதான்."

"முத்து....ரஞ்சன் அண்ணாக்கு எழுதி....அங்கேயிருந்து நல்ல உசத்தியான ஸெட்டு பல்லு வாங்கி அனுப்பச் சொல்லி உனக்கு மாட்டிவிட வேணும்."

"அதெல்லாம் எதுக்குமா....நான் கெழவன்தானே கிழவனுக்கு பல்லு விழாது இருக்குமா?"

"நீ ஒண்ணும் பல்லு விழற கிழமில்லை. சதாசிவத் தாத்தாகூட ஸெட்டு பல்லுதானே போட்டிண்டிருக்கிறார். அதனால் கட்டாயம் நீயும்...உம்.. சொல்வதைக் கேட்கணும்...ஜாக்கிரதை" என்று மிரட்டி விழித்தாள்.

"ஐயோ....பயமா யிருக்குதே....விழிப்பதைப் பார்த்தால்....சரிம்மா நீ சொல்றபடியேதான் நடக்கறேன். எத்தனை நேரம் வாசலிலேயே நின்று வம்பளப்பது. அம்மா எப்படி யிருக்காங்க..."

இத்தனை நேரம் சந்தோஷ ச்ருதியில் இழைந்து கொண்டிருந்த அவள் குரல் சட்டென இறங்கி பழைய நிலையை அடைந்தது."அம்மாவா....முத்து....உம்...உள்ளே" என்று இழுத்து நிறுத்திவிட்டாள். குழந்தைகளின் இயற்கையான குணத்திற்கேற்ப, புதிய விஷயம் குறுக்கிட்டால் பழையது மறந்து அதில் இறங்கி திளைப்பார்கள். மறு

படியும் அதை நினைவூட்டினால் கிளறிவிடப்பட்டு அதிகமாகத் தாக்கப்படுவார்கள். அதை நன்றாக எடுத்துக் காட்டியது. சரோஜாவின் குரலும் செய்கையும்.

அவளைத்தேற்ற நினைத்த முத்து "சரோ! வாக்கண்ணு. உள்ளே போவலாம்" என்று அழைத்தான். சிறிது உத்சாகத்துடன் அவன் கையைப் பிடித்தவாறு உள்ளேயும் போனாள் அவள்.

"அம்மா... அம்மா..." என்று இரண்டு குரல் கொடுத்தான் முத்து. லக்ஷ்மியின் காதில் அது ஏன் விழுகிறது.

"அம்மா யார் வந்திருப்பது பார். எப்பொழுதும் என்னம்மா அழுகை" என்று சரோஜா அருகில் சென்று லக்ஷ்மியின் கவனத்தைத் திருப்பினாள். லக்ஷ்மி திரும்பினாள். முத்து நின்றிருந்தான். அவன் அருகே குழந்தையுடன் வள்ளி. மனத்தில் ஒரு மூலையில் சந்தோஷம் நிறைந்த த்ருப்தியுடன் எழுந்து வந்தாள்.

"சௌக்கியங்களா... அம்மா. ரகு, ரேவதி யெல்லாம் எப்படி இருக்காங்க."

"சௌக்கியமா!....உம்... ரேவதி கல்யாணம் என்று நேற்று சிநேகிதிகளோடு சென்றவள். வீடு திரும்பவே இல்லை. ரகுவா....என் வயிறு செய்த பாக்கியம் அவ்வளவு தான் முத்து!" என்று கூறியதும் கண்ணீர் துளிகள் யார் உத்தரவையும் எதிர்பார்க்காது படபடவென உதிர்ந்து நனைத்தது.

"ஏம்மா, எப்போதும் அழுதா உடம்பு என்னத்துக் கும்மா ஆகும்.!"

"வள்ளி...பழையது எல்லாவற்றையும் மறந்துவிடு, எல்லாம் வேளையின் விபரீதம்தான். இனி அம்மாதிரி சம்பவங்கள் நடக்க இடம் கொடுக்காமல் பார்த்துக்கொள்வது என் பொறுப்பு. நீங்கள் இருவரும் முன்பு இருந்த மாதிரியே, நான் ஏதோ தெரியாது இழிவு படுத்திவிட்டேன். அதை மறந்து முன்பு எப்படி விசுவாசமாக இருந்தீர்களோ அப்படியேயிருக்க வேண்டும். ரஞ்சன் வந்து விட்டால் பிறகு எனக்குக் கவலையில்லை."

"அதற்கென்னம்மா....நாங்கள் எதையும் மனதில் வைத்துக்கொள்ளவில்லை. இந்த வீட்டுக் கவலையே உங்களுக்கு வேண்டாங்க என்றான் முத்து."

"முத்து! இப்படிபட்டவனை அந்த...எனக்கு அவன் பெயரைக் கூறக்கூட பிடிக்கவில்லை உன்னை இப்படி

செய்துவிட்டானே. முத்து! உனக்கு ஸெட்டு பல்லுக்கு ஏற்பாடு செய்து விடுகிறேன்.''

''ஹூம்... அதெல்லாம் எதுக்கும்மா...வேண்டாங்க. இருக்கிற பல்லு போதுங்க.''

''நான் அழகிற்குப், இருக்கும் பல்லு போதாது என்றும் கூறவில்லை. உன் வாயைப் பார்த்து திடீரென்று இப்படியாகியதின் காரணத்தை எல்லோரும் கேட்பார்கள். கடைசியில் ஒவ்வொன்றாக நம் வீட்டு ரகசியங்கள் எல்லாம் வெளியாகிவிடும். அதற்காகத்தான் கூறுகிறேன். சதாசிவத்தின் மூலம் நான் ஏற்பாடு செய்துவிடுகிறேன். அதன் செலவு என்னுடையது'' என்றாள்.

அதைத் தடுத்து பேச முத்து எத்தனிக்கவில்லை. திடீரென்று ஏதோ நினைத்துக் கொண்டவள்போல் லக்ஷ்மி ''நீ அந்த வீட்டிற்கு வத்துதான் வருகிறாயா?'' என்று சற்று படபடப்போடு கேட்டாள்.

''ஆமாங்க...சதாசிவ ஐயாவீட்டுக்கு வந்துதான்... இங்கே....'' என்று கூறும்போதே, ''அப்படியானால் உனக்கு....அந்த..,'' என்று ஹீனஸ்வரத்தில் இறங்கிக் கொண்டே வந்தது அவள் குரல். முகம் கலவரத்தாலும் பீதியாலும் சூழப்பட்டுத் தாழ்ந்தது.

இதன் காரணத்தை ஒரு நொடியில் அறிந்தான் முத்து. பார்வதி அம்மாள் கூறியதைக் கூறுவதா? வேண்டாமா? என்று குழம்பினான். நமக்கு அவ்விஷயம் தெரிந்துவிட்டதோ? என்றுதானே அம்மாவிற்குக் கவலை. அதனால் தெரியாதுபோல நடந்து கொண்டால்தான் நல்லது'—இப்படி முடிவு செய்த முத்து, வள்ளிக்கு ஜாடை செய்துவிட்டு, ''என்னதும்....மா'' என்று ஒன்றும் அறியாவதன் போல் கேட்டான்.

''ஒன்றுமில்லை முத்து ஐயா ஏதாவது சொன்னாரா? என்று கேட்டேன்''

''இல்லீங்க. 'நீ பழையபடி போய் உங்க எசமான் வீட்டுலே ஒத்துமையா இருன்னு' சொன்னாரு அவ்வளவு தானுங்க''

''ஓ! அப்படியா சரி....உன் சாமான்களை யெல்லாம் வைத்துவிட்டு சற்று நேரம் இளைப்பாரு...பிறகு வேலை செய்யலாம்'' என்றாள். அப்போது சரோஜா முத்து காதருகில் ஏதோ குசமசத்துவிட்டு, அவர்கள் குழந்தையுடன் விளையாடச் சென்றாள்.

"அம்மா!....நீங்க காலேலேயிருந்து ஒண்ணும் சாப்பிட லிங்களாமே....சரோஜா சொல்லியது" என்று கேட்டான் முத்து.

"என்னவோ பிடிக்கவில்லே....நீ போ. நான் சாப்பிடு கிறேன்" என்று அவனை அனுப்பிவைத்தாள்.

"என்ன இருந்தாலும், சதாசிவம் கெட்டிக்காரர் இல்லேயா. அதனுல்தான் முத்துவிடம் இவ்விஷயத்தைக் கூறுது அனுப்பியிருக்கிறுர். அப்ப...... இதுவரையில் த்ருப்தி" என்று மனசாந்தியுடன் கூறிக் கொண்டாள் லக்ஷ்மி.

'சற்று நேரம் முன்பு என்னே, 'உனக்கு துக்கம் கிடை யாது, அழுகை வராது. ஆண்கட்டை'...என்றெல்லாம் திட்டி முகாரி பாடியவள், இப்போது அந்தக் குழந்தையோடு விளையாட விளையாட்டு சாமான்களுடன் செல்கிறுள். ஒவ்



வொரு நிமிஷம் ஒரு புத்திடா இவளுக்கு' என்று சரோஜா வைப் பார்த்து, அதே குழந்தை புத்தியுள்ள வாசுவே நினைத்து வியந்தான். முத்து தம்பதிகள் வந்ததில் எல் லோரையும் போல் அவன் உள்ளமும் அமைதியால் நிறைந் திருந்தது.

வீட்டில் வேலைகளை செய்வதோடு, எல்லா பொறுப்பையும் ஏற்றுக்கொண்டு அக்கரையாக வள்ளியும் முத்துவும் நடத்திவருவதால் வேலை பாரம் குறைந்தது. அதோடு, முகமூடிகளைக் கண்டது முதல் ஒரு புருஷ துணைகூட இல்லாது இருந்த நடுக்கமும் குறைந்தது. வீடே கலகலவென இருப்பதுபோல் லக்ஷ்மிக்கு தோன்றியது. குழந்தைகளும் தெம்புடனேயே ஓடியாடி நாட்களைக் கடத்திக் கொண்டிருந்தனர்.

வெளிக்கு அழுகை நின்றிருந்ததே தவிர, லக்ஷ்மியின் உள்ளத்தில் ரேவதி திரும்பாத காரணம் புரியாது அவளை வாட்டிக் கொண்டே இருந்தது. 'ரகுவானால் ஆண்பிள்ளை. அது ஒரு விதம். இவள் எந்த இடத்திற்குப் போயிருக்கிறாள் என்பதே தெரியவில்லை. ஏதாவது ஒரு ஆளை தேடச் சொல்லவும் முடியாத நிலையில் இருக்கிறது. 'மரம் வைத்தவன் தண்ணீர் வார்ப்பான்' என்ற பழமொழிபடி ஆண்டவனே! நீ அவளைப் பிறப்பித்துவிட்டாய். நீயே அவளை நல்வழியில் திருப்பி காக்கவேண்டும்.' என்று வேண்டுவதைத் தவிர அவளுக்கு வேறென்ன தோன்றும் அச்சமயத்தில். அல்லது தெரியதான் தெரியுமா? ஆபத்து என்னும்போது தானே கடவுளை நினைக்கிறோம். துதிக்கிறோம்.

அத்தருணம், ரஞ்சனிடமிருந்து ஒரு கடிதம் வந்து சேர்ந்தது. அவனுக்கு எப்பொழுதும் எழுத என்ன விஷயம் இருக்கிறது. குருட்டு பாடமாக ரேவதி, ரகு போன்றவர்களைப்பற்றிதான் பக்கம் பக்கமாக எழுதியிருந்தான். சரோஜா, வாஸு, இருவர் மனதிற்கும் உத்சாகமும் சந்தோஷமும் தரும் வகையிலும் அதில் எழுதியிருந்தது.

ரஞ்சனிடமிருந்து கடிதங்கள் வந்து கொண்டிருக்கின்றனவே தவிர, லக்ஷ்மி ஒரு பதிலும் எழுதவில்லை. என்ன எழுதுவாள் பாவம். அவன் கேட்டிருக்கும் கேள்விகளுக்குதான் இங்குவிடைகள் வரியில் யில்லாமல் புராணம் போலல்லவா இருக்கிறது.

ரேவதி!....அவளை நினைக்கும்போதே உடல் சிலிர்த்தது. ரகுவா...குத்திட்ட மயிர் கால்கள் படுக்க மறுத்துவிட்டன. இந்நிலையில் பதிலா... ரஞ்சனுக்கு!

இவள் மனதுபடி, சொல்படி, என்ன ஆட்டம் ஆட்டுவித்தாலும் ஆடும் ஒரே கருவியான டெலிபோனருகில் சென்றாள். சதாசிவத்தின் வீட்டிற்கு விசையை திருப்பி பேச முற்பட்டாள்.

"ஓ!....நான்தான்....லக்ஷ்மி பேசுகிறேன்...ஆமாம்.... ரேவதி நாலு நாளாகியும் இன்னும் வரவில்லை. கல்யாணம் எங்கு, யார் மனிதர்கள் என்பதும் தெரியாது....உம்.. அதனால் நீங்கள் சில நிமிஷங்கள் சிரமத்தைப் பாராது இங்கு வந்தால் நன்ருக இருக்கும்....சில விஷயங்கள் பேசதான்." இப்படி பேசிக்கொண்டிருக்கும்போது வாயிலில் சந்தடி கேட்டது. அதற்குள் சரோஜாவும் "கனம் ஸ்ரீமதி ரேவதி அம்மாள் அவர்கள் விஜயம் செய்கிருர்கள். பராக். பராக்" என்றுகூப்பாடு போட்டாள்.

அந்நிமிடமே போனில்...."ரேவதி வந்துகொண்டே இருக்கிருள்....இல்லை...நான் இன்னும் பார்க்கவில்லை.... எதற்கும் நீங்கள் வந்து அவளுக்கு புத்திமதி கூறிவிட்டுச் செல்லவேண்டும் என எனக்குத் தோன்றுகிறது" என்று கூறிஞள் லக்ஷ்மி. பிறகு சாவதானமாக வெளியே வரும் போது "அம்மா! ரேவதியோடு, இரண்டு தடியன், இரண்டு தடிச்சி வந்திருக்கிருர்கள்" என்ருள் சரோஜா.

"ஏண்டியம்மா ரேவதி! கல்யாணம் உன்னை விட்டு விட்டதா...இன்னும் பிடித்துக்கொண்டே இருக்கா? பலமான சாப்பாடு சாப்பிட்டு உப்பினது போதுமா?" என்று கிண்டிஞள் சரோஜா.

"ஏய்! வாயை மூடு."

"நீ மூடு முதலில். கல்யாணம் என்ருல் நாளுக்காக போவார்கள். தாம்பூலம் வாங்கிக்கொண்டு வருவார்கள். உன்னைப்போல் நாலு நாள் டேரா அடித்து யாரும் உட்காரமாட்டார்கள். தூ தூ என்ன? உன் அக்காவிற்கு கல்யாணமா? தங்கைக்கா? யாரோ ஒருத்தி கல்யாணத்திற்கே இந்த அழகு."

"என்ன ரேவதி உன் தங்கை பச்சைமிளகாயாய் இருக்கிருளே."

"ஹூஉம்....நான் பச்சை மிளகாய் நீங்கள்....குண்டு மிளகாய், வத்த மிளகாய். பேச்சைப்பாரு. நீ எங்காவது கல்யாணத்துக்குப்போய் நாலுநாள் தகவல் கொடுக்காமல் இருந்தால் உங்கள் வீட்டில் திட்டமாட்டார்கள். கவலையே கிடையாதோ உங்கள் வீட்டிலுள்ளவர்களுக்கு. பாவம்.... உன் அம்மா ரொம்ப நல்லவள் போலிருக்கிறது. எங்கம்மா அப்படியில்லை. இவள் வராது நாலு நாளாய் ஒரு பிடி சோறுகூட தின்னுது பட்டினியால் சுருண்டு கிடக்கிருள். அந்த பாவம் ரேவதிக்கும் உங்களுக்கும்தான். நினைவு வைத்துக்கொள்."

"ரேவதி! நீ வீட்டில் கூறிவிட்டு வரவில்லையா எங்கு போகிறேன் என்று"—என்று கேட்டாள் அவள் சகி. ரேவதி பதில் கூறாமல் விழித்தாள். பிறகு "கல்யாணத்திற்கு என்று....சொன்னேன்" என்றாள்.

"கல்யாணத்திற்கு...என்று....ஊரில் பத்து வீட்டில் கல்யாணம். மேளம் அடிக்கிறது. ரேவதி எந்த கல்யாணத்தில் இருக்கிறாள் என்று மான அவமானத்தைவிட்டு வீடு வீடாக ஏறி இறங்கவேண்டும். அதற்காவது இங்கு ஆள் இருக்கிறார்களா?"

"ஏன் நீயே வரலாமே"—என்றாள் ரேவதியின் தோழி.

"உங்கள் மாதிரி என்னையும் வெட்கம் கெட்டவள் என்று நினைப்போ. அவள் எக்கேடாவது கெட்டுப்போகட்டும். எனக்கேன் கவலை. நான் ஏன் வருகிறேன். சரி.... சரி....உங்களோடு பேசி நேரத்தை வீணாக்குவானேன். ரேவதி! கல்யாண சீசன் முடிந்துவிட்டால் உள்ளே போ. இல்லாவிடில் இப்போதே அவர்களுடன் போய்விட்டு, என்றைக்கு இஷ்டமோ அன்றைக்கு வரலாம்."

லக்ஷ்மி அங்கேயேதான் ரேவதியை முறைத்து பார்த்தவாறு நின்றிருந்தாள். ஆனால் சரோஜா பேசுவதைத் தடுக்காமல், பேசட்டும் என்றே விட்டிருந்தாள். கடைசியில் "ரேவதி நீ செய்வது நன்றாக இருக்கிறதா? இப்படி நீ அடங்காது சுற்றிக்கொண்டிருந்தால், கடைசியில் எந்த படுகுழியில் விழுவாய் என்பது உனக்குத் தெரியவேயில்லை. ரஞ்சனை, உங்களை விசாரித்து கடிதம் மேல் கடிதம் எழுதுகிறான். இந்த அழகையா நான் எழுதுவது? எல்லாம் யோசனை செய்துபார்" என்றாள்.

அதற்குள் அவள் சிநேகிதி "இல்லை மாமி! இவள் வீட்டிற்குப் போகவேண்டும் என்றுதான் குதித்தாள். நாங்கள்தான் எல்லோரும் ஒன்று சேர்ந்திருப்பதால் உல்லாசப் பிரயாணம் போய்வரலாம்"என்று கூறி தடுத்துவிட்டோம். அவள் மிகவும் பயப்பட்டாள்"........

"ச்சு...ஐயோ பாவம்! ஒரு விபூதி பூசி, வேப்பலை அடிச்சு அந்த பயத்திற்கு....ஹூம். உல்லாச பிரயாணத்தில் யார் மந்திரம்போட இருக்கிறார்கள். மேலே சொல்லுங்கள். சித்தியிடம் உங்கள் சிநேகிதி பயந்து சாகிறாளாக்கும். கொடுமை...கொடுமை. இதைக் கண்டிக்க, சிநேகிதி படைகள் எங்கள் வீட்டை முற்றுகையிடலாமே.... தூ....பேச்சைப்பாரு...என் அம்மாதான் இவள் ஆடுதல்களுக்கெல்லாம் ஆடி நடுங்குகிறாள். தெரிந்துக்கொள். விஷயம் தெரியாது எங்கள் வீட்டில் யாராவது பேசினால் கெட்ட கோபம் வரும்"—என்று சரோஜா குறுக்கிட்டாள்.

"அம்மாடியோ....வாயாடி நம்பர் ஒன்றுதான். உன் கோபம் என்னை ஒன்றும் செய்யாது. முதலில் நான் உன்னிடம் பேசவில்லை" என்றவள் "மாமீ! நான் போய்



சொல்லவில்லை. இதோ பாருங்கள் நாங்கள் அங்கு சென்றிருந்தபோது எடுத்துக்கொண்ட புகைப்படம்" என்று நீட்டினாள்.

சரோஜா அதை வெடுக்கென்று பிடுங்கி தன் கையில் வைத்துக்கொண்டு "ஓஹோ! முன்னேற்பாடாக நிரூபிக்க எடுத்த படமோ, உங்கள் முன்யோசனையை மெச்சுகிறேன். சரி...யாருக்கு வேண்டும் இந்த புகைப்படம்? கிழித்துபோடு குப்பையிலே" என்று கூறி அவளிடமே கொடுக்கப் போனாள். அதற்குள் ரேவதியின் கை அதை பறித்து விட்டது.

சிநேகிதியின் கோபத்தைக்காட்டிலும், ரேவதியின் கோபம் உச்சநிலைக்கு எட்டிக்கொண்டிருந்தது. அந்த பெண் "உங்கள் ரேவதிய்யை கொண்டு விட்டுவிட்டேன். சொல்லிவிட்டுப்போக வந்துதான், இத்தனை பாடங்கள் வாங்கிக்கொண்டேன்" என்று கூறியவாறே நடந்து கொண்டிருந்தாள். அவள் ரேவதியிடம் சொல்லிக்கொள்ளாது போனது ரேவதியின் மனதை வருத்தியது. அவள் கோபத்தைத் தணிக்க என்ன வழி செய்யலாம் என்று யோசனை செய்து கொண்டிருந்தாள்; உள் மனதோ சரோஜாவை சபித்தவண்ணம் இருந்தது. திரும்பிய

ரேவதி லக்ஷ்மி உள்ளே சென்று விட்டிருந்ததை உணர்ந்தாள்.

சரோஜாமட்டும் ஒரு மூலையில் ஏளனமாக நின்று புன்முறுவல் செய்வதையும் கவனித்தாள். தன் ஆத்திரம் தீர சரோஜாவை ஒரு அடியாவது கொடுத்தால்தான் மனது சாந்தியுறும் போலிருந்தது.

அதற்கான தக்க சமயத்தை எதிர்பார்த்திருந்தவள் வீட்டில் குறுக்கும் நெடுக்குமாக அலைந்தாள். பின்புறம் வள்ளி முத்து இருவரும் வந்துவிட்டார்கள் என்பதையும் அறிந்தாள். "ஏய் புலடீன்! உன்னுடைய அந்தரங்க காரியதரிசிகள் எல்லாம் வந்துவிட்டதா?" என்று கேட்டாள்.

"அந்தரங்க காரியதரிசி....அது யாரடீ? ஓஹோ.... புரிந்துவிட்டது. வந்துவிட்டதா என்று நீ எரிச்சலோடு கேட்டதால் முத்து, வள்ளி என்று ஊகிக்கிறேன். என்ன....என் ஊகம் சரிதானே."

"..........."

"ஐயோ...பேசாவிட்டால் போ. தொண்டைத் தண்ணி லாபம். முத்து வள்ளி ஊருக்குப்போய் வேண்டிய வைத்தியம் செய்துகொண்டார்கள், உடனே சமர்த்தாக புறப்பட்டு வந்து விட்டார்கள். உன்னை மாதிரி ஊரார் வீட்டில் மரியாதையில்லாமல் நாலு நாள் டேரா அடித்து..."

"ஏய்! அடி கேட்கிறதோ"

"ஆமாம். ரொம்ப நளாயிற்று. கொடு பெற்றுக் கொள்கிறேன். ரகுவும் ஓடிப்போய்விட்டான். நீயும் கல்யாணம், காசியாத்திரை என்று சுற்றுகிறாய். முதலில் அவன் ஓடிப்போனதைப் பார்த்துதானே, 'நீயும் ஆசைப் பட்டு ஓடினாய். எல்லோரும் ஓடு காலிகளாய் இருப்பதைப் பார்த்து...முத்துவும் உங்களைப் பின்பற்றாமல் சீக்கிரம் வந்தானே அது ஒரு விதத்தில் சந்தோஷம்."

"ஏய் சரோ! நானும் போனால் போகிறது என்று விட்டால், தலைக்கு மேலா ஏறுகிறாய். ஓடுகாலியாமே,..யார் ஓடினார்கள்...இரு..." என்றவள் சுற்றும் முற்றும் பார்த்து விட்டு ஓங்கி ஒரு அறை வைத்தாள். மறு நிமிடம் தன் அறையை நோக்கி ஓட்டம் எடுத்தாள்.

"ரேவதி! கூவதி! உன்னை நான் மறுபடியும் அடிக்க மாட்டேன். ஆனால் என்னை ஒரு அடி வைத்ததற்கு பலன் சேர்த்து பன்மடங்காக வாங்க வைப்பேன் தெரியுமா

கிராதகி" என்று கூவினாள். அப்போது அங்கு முத்துவின் குழந்தையும் வரவே, இதை மறந்து விளையாட ஓடினாள்.

லக்ஷ்மி ரகுவின் விஷயங்களை, ரேவதியிடம் சொல்லலாமா? வேண்டாமா? என்றே குழம்பிக் கொண்டிருந்தாள். அந்த சமயம் இவள் அழைப்பிற்கிணங்கிய சதாசிவமும் வந்தார்.

வரும்போதே "எங்கேம்மா ரேவதி?" என்றவாறு தான் வந்தார். இவர் குரல் மேலிருந்த ரேவதிக்கும் எட்டியதால், அவரிடம் எதுவும் பேசக்கூடாது எது கூறினாலும் பேசாமல் இருந்து விடுவது என்ற தீர்மானத்துடன் மெள்ளமாக இறங்கி வந்தாள்.

"ரேவதி! இப்போதுதான் வருகிறாயா?" என்ற சதாசிவத்தின் கேள்விக்கு மௌனமாகவே தலையாட்டினாள்.

"ஏனம்மா! கல்யாணம் என்றால் போக வேண்டியதுதான். ஆனால் போகும் இடத்தையும் எத்தனை நாள் தங்குகிறேன் என்பதை சொல்லவேண்டாமா? 'நான் எங்கே போய்விடுவேன். இதோ வரவில்லையா?' என்று கேட்பாய். ஆனால் வீட்டிலிருப்பவர்களுக்கு வீண் கவலை. ரஞ்சன் மெச்சத் தகும்படி அவன் வருவதற்குள் இங்கு மாறுதல்கள் ஏற்படவேண்டாமா? நான் எப்போது வந்தாலும், ஏதாவது கூறிச் செல்கிறேனே என்று உனக்கு என்மீது எரிச்சல்கூட உண்டாகும் என் கடமை சொல்கிறேன். நீ புத்தி தெரிந்தவள். மேலே வேறொன்றும் இல்லை" என்று கடகடவென கூறி நிறுத்தினார்.

பதில் கூறாது நின்றிருந்தவள் 'உம். சீக்கிரம் முடிந்து விட்டதே' என்று மனதில் நினைத்துக் கொண்டே சென்றாள்.

"நீங்கள் ரகுவின் இருப்பிடத்தைக் கண்டுபிடித்து விட்டேன் என்றீர்களே. அங்கு போய் பார்த்தீர்களா" என்று பேச்சைத் துவக்கினாள்.

"இப்படிப்பட்ட காரியங்களெல்லாம் சமயம் பார்த்து தான் செய்யவேண்டும். அவனை நான் கண்டுபிடித்த விஷயமே ஒரு கதைபோல்தான்.

எத்தனையோ கட்சிகள், சங்கங்கள், எல்லாம் புத்திலிருந்து ஈசல் கிளம்புவதுபோல் கிளம்பியிருப்பதால், அந்த குழுக்களில் இவன் சேர்ந்திருப்பான் என எனக்குத்

தோன்றியது. அதனால் நம் ஊருக்கு சுற்றுவட்டாரத்தில் நடக்கும் கூட்டங்கள் எல்லாவற்றிற்கும் போனேன். அப்படி போகையில் 'முற்போக்காளர் கட்சி' என்றதற்கும் போனேன். அங்கு யாரோ பிரசங்கம் செய்து கொண்டிருந்தார்கள். குரலிலிருந்து அது ரகுதான் எனவும் தீர்மானித்தேன்.

கூட்டம் நடக்குமிடத்திற்கு, சற்று தொலைவில் நின்றே என்ன பேசுகிறான் என்பதை கவனித்து வந்தேன்.

'பழைய பண்பாடுகளைக் கொளுத்தவேண்டும். தொந்திகிழங்களை கொலை புரியவேண்டும். வீட்டில் பெரியவர்கள் என பெயர் வைத்துகொண்டு, கொண்டம் செய்துவரும் பெருச்சாளிகளையெல்லாம், பச்சிலையாய் பிழிந்துவிட வேண்டும். அவர்களுக்கு அடங்கி வாயைப் பிளந்து நிற்கும் நம்மையொத்த வாலிபர்களுக்கு, தனி பள்ளியொன்று வைத்து, அவர்களைத் திருத்தி நம் முற்போக்காளர் கட்சியின் பலத்தைப் பெருக்கி, எல்லோரும் மண்ணைக் கவ்வும்படி செய்யவேண்டும்.

நண்பர்களே! கவனியுங்கள். நாம் எல்லோரும் வாலிபர்கள். எதை நினைத்தாலும் சாதிப்போம். நமக்கு சுதந்திரம் தராமல் பழைய கண்மூடி வழக்கங்களால் நம்மைக் கட்டுப்படுத்தி சிறையிலடிக்கும் மூட மக்களுக்கு அறிவு ஊட்டுவோம்.''

இன்னும் இப்படி மணி கணக்காக பேசியதே பேசினான். அதை முழுவதும் கூறுவதென்பது சாத்தியமாகாது. பிறகு ஒருவாறாக கூட்டமும் முடிந்தது. என் நோக்கம், அவன் அங்கிருந்து எங்கு போகிறான் என்பதுதானே. அதனால் நான் முன்னேற்பாடாக அழைத்து வந்திருந்த ஆளை காரிலிருந்து இறக்கினேன். ரகுவையே பின் தொடர்ந்து இருப்பிடத்தைக் கண்டுவரக் கூறினேன்.

ஏன் வேறு ஆளை அனுப்பினேன் என்றால் நான் காரில் பின் தொடர்ந்தால் கண்டுவிடுவான் ரகு. அதனால் தான் முன்பின் அறியாத ஆளாய் அனுப்பினேன். இடமும் தெரிந்தது.'' என்று தங்கு தடையின்றி வெளிப்பட்டது அவர் பேச்சு.

"அப்படியா?....எந்த இடத்தில் இந்தக் கூட்டம் நடந்தது'' என்று அவர் விட்டிருந்த ஒரு பதிலுக்கும் கேள்வியைப் போட்டுவிட்டாள் லக்ஷ்மி. "ஓ அதுவா. நம் ஊருக்கு பத்து மைலில்தான். நீங்கள் இவ்விஷயத்தில் அவசரப்படாது மனதை அடக்கிக் கொள்ளுங்கள். எனக்கு சமயம்

வரியக்கிறபோது நான் யோசனை செய்து எல்லாவற்றை யும் செய்வேன்".

"ஒரு விஷயம்....கூற மறந்தேவிட்டேன். ரஞ்சனிட மிருந்து கடிதம் வந்தது. அவன் கேட்டிருக்கும் கேள்வி களுக்கு என்ன பதில் எழுதுவது என்றே புரியவில்லை."

"பேசாமல் எல்லோரும் க்ஷேமம் என்று நாலு வரி எழுதி போட்டுவிட்டால் போதும். ஹூம்....இன்று நான் முக்கியமாக வந்த விஷயம் அறுந்துபோய் ஏதேதோ பேசிக்கொண்டிருக்கிறேன். அன்று அவன் பங்கு பணத் தைப் பிரித்து கொடுத்துவிடலாம் என்றதற்கு வேண்டாம் என்றதால் அதோடு அது போயிற்று. இப்போது உங்கள் கைப்பட, 'உன் பணத்தை உன்னிடம் சேர்த்து விடு கிறேன். நீ வந்து பெற்றுக்கொள். உன்னிஷ்டம்போல் இருக்கலாம்' என்று ரகுவிற்கு ஒரு கடிதம் எழுதித் தந்தால் அதைக் காட்டி அதன் மூலம் ஏதாவது செய்ய ஏதுவாய் இருக்கும்." என்றார்.

இதைக் கேட்டதும், எழுத நினைக்கும் போதே லக்ஷ்மி யின் கரங்கள் நடுங்கின. ஆனாலும் இந்த யோசனை சரி யென்று தோன்றியதால் எழுதத் தொடங்கினாள்.

"அன்புள்ள ரகுவிற்கு,

நீ சதாசிவத்தைக் கேட்டபடி உன் பங்கு சொத்தை உன்னிடம் சேர்பிக்க முடிவு செய்து விட்டேன். அதற்காக நீ இத்தனை இன்னல்கள் செய்வாய் என நான் நினைக்கவேயில்லை. இங்கு வந்து அதைப் பெற்றுகொள். வீட்டிலேயே இருந்தாலும் சரி, இல்லை வெளியே சென்றாலும் சரிதான். உன்னிஷ்டம்போல் உன் பணத்தை செலவு செய். இதன் பிறகாவது நீ எங்களுக் குக் கஷ்டம் கொடுத்து என்னை பதறும்படி செய் யாமல் இருப்பாய் என நினைக்கிறேன். இக் கடிதம் கண்டதும் நேரில் வரவும்.

மற்றவை நேரில்.

உன் தாய்,
லக்ஷ்மி"

கடிதத்தை படிப்பதற்காக சதாசிவத்திடம் கொடுத் தாள். திடத்துடன் கடிதம் எழுதினாலும் கையின் நடுக்கத்தால் எழுத்துக்கள் கிறுக்கலாகவே இருந்தன.

கடிதம் சரியென தோன்றியதும் சதாசிவம் விடை பெற்றார்.

...காடு ஆவணக் காப்பக நூலக...
(3)211

கீர்த்தனை பாடி முடிந்த பிறகு ராகம் பாடி நிறுத்துவது முதலிய முறைகளை புதுமையாகக் கையாண்டு வந்தார்கள். அந்த முறையில் பங்களூர் நாகரத்னம்மாள் தன்னுடைய இனிமையான—கம்பீரமான சாரீரத்துடன் மேல் ஸ்தாயி பஞ்சமத்தை அனுயாஸமாக எட்டிப் பிடித்து சம்சாரம் செய்து பல ராகங்களையும், கீர்த்தனைகளையும் பாடினார்கள். அந்த அம்மாளுடைய தனிச்சிறப்பு வாய்ந்த குணவிசேஷமும், பொருக்கு மணிகள் போன்ற பேச்சு வன்மையும், வாழை பழத்தில் ஊசி ஏற்றுவதுபோல ஹாஸ்ய ரஸம் கலந்து பேசும் திறமையும் கூட பழகி அனுபவித்தவர்களுக்கு நன்றாகத் தெரியும்.

அன்றைய தினம் மகாத்மா காந்திஜீயை பற்றி ஒரு முக்யமான விஷயம் பத்திரிகையில் வந்தது. சுமார் ஏழு ஏழரை மணி நேரத்தில் கூட்டத்தின் இடையே "சலசல" என்று பேச்சு கிளம்பிவிட்டது. அத்தனையும் பத்திரிகை விஷயம். இந்த அம்மாள் தர்பார் ராகத்தை அற்புதமாய் பாடி 'நாரதகுருசாமி' என்ற பாட்டை பாடிக்கொண்டிருந்தார்கள். இந்த பேச்சின் ஒலி அந்த பாட்டை அடக்கிவிட்டதென்றால் மிகையாகாது. இடை இடையே பாட்டை நிறுத்திவிட்டு கூட்டத்தை பலமுறை பார்த்தார்கள். பிடிலுக்கும், மிருதங்கத்திற்கும் சந்தர்ப்பம் கொடுத்து பார்த்தார்கள். பேச்சு அடங்கவில்லை. அக்காலத்து கச்சேரி பத்ததி ராகம், பல்லவி, ராகமாலிகை முதலிய பெரிய உருப்படிகள் முடிந்த பிறகு சில்லரை உருப்படிகள் என்ற பந்தாவில் ஜாவளி, பதம், தமிழ் பாட்டுகள், தேசியகீதம், தில்லானா முதலியவைகளைப் பாடுவார்கள். அன்று நாகரத்னம்மாளுக்கு உண்மையில் கோபம் வந்துவிட்டது. பல்லவி முதலிய பாடிய பிறகு பாடவேண்டிய ஜாவளியை சடக்கென்று ஆரம்பித்தார்கள். அந்த ஜாவளியின் அடிகளாவது "ஜாணுதனமு மாடிகி சாலு நிலுபுரா" என்று காபி ராகத்தில் உள்ள ஜாவளியை பாடி 'சாலு நிலுபுரா', 'சாலு நிலுபுரா' என்ற அந்த அடியை மட்டும் தனது கம்பீர த்வனியில் பத்துதரம் திருப்பினார்கள். அதற்கு தகுந்தாற்போல் மிருதங்கக்காரர் பலமான ஓசைசெய்து சாமர்த்தியமாக வாசித்தார். அதுவரையில் சளசள என்று பேசிக்கொண்டிருந்த இடத்தில் பளபளபள என்ற கரகோஷம் வானை அளாவியது. அந்த சபையின் சொந்த நிர்வாகஸ்தரான ஸ்ரீமான் வெங்கடாசாரியார் அவர்கள் இந்த பாட்டையும், கரகோஷத்தையும் கேட்டு பரபரப்புடன் மேடை அருகில் வந்தார். விஷயத்தை நொடியில் அறிந்துக்கொண்டு "சபாஷ் நாகரத்னம்மா...உங்கள் சங்கீத கலை சரியான பாடம் கற்பித்து விட்டது. அதை நான் மிகவும் பாராட்டுகிறேன்" என்று இன்னும் ஏதேதோ தன் கருத்துக்களை எடுத்துச் சொன்னார். நாகரத்னம்மாள் பெரியதாய் சிரித்துவிட்டு புன்சிரிப்புடன் மங்களம் பாடிவிடலாமா என்று கேட்டார்கள். சபையில் அநேகர் முகத்தில் அசடு வழிந்தது. சிலர் வேண்டாம் நிறுத்த வேண்டாம். பல்லவி பைரவி பாடுங்கள் என்று கூக்குரலிட்டார்கள். அடுத்த நிமிஷமே ஜாவளி நின்று பைரவி ராகம் எல்லோர் செவிகளிலும் ரீங்காரம் செய்தது.

பண்டிட் டி. கோபாலாச்சார்லுவின்
அருணை
கர்ப்பாசயரோக நிவாரணி
ஆயுர்வேதாஸ்ரமம் லிமிடெட், மதராஸ் 17.

AYURVEDASRAMAM (PRIVATE) LTD.
MADRAS-17.

வை. மு. கோ. நாவல்கள்

ரூ. 4-8
வைபஹி (2 பாகம்)

ரூ. 4.
சாந்தியின் சிகரம்

ரூ. 3.
நிர்மலநீரோடை

ரூ. 2-8
மலர்ந்த இதழ்
வானக்குயில்
மதுரகீதம்

ரூ. 2-4
ஞானதீபம்

ரூ. 2.
சந்தோஷ மலர்
கருணாலயம்
வாத்ஸல்யம்
அமுதமொழி
தெய்வீக ஒளி
பாதாஞ்சலி
புனிதபவனம்
குணக் குன்று
ஜீவநாடி

ரூ. 1-12
அனாதைப்பெண்
புகழ்மாலை
கலாநிலயம்
சிலாசாசனம்
வீராங்கனை
அமைதியின்
அஸ்திவாரம்
கடமையின் எல்லை

ரூ. 1-8
பிரதிபலன்
பவித்திரப்பதுமை
ஓவியப் பரிசு
காலக்கண்ணாடி
ஜெயபேரிகை
நம்பிக்கைப்பாலம்
சுதந்திரப் பறவை
மகிழ்ச்சி உதயம்

ரூ. 1-4
கோபால ரத்னம்
க்ருபாமந்திர்
புதுமைக்கோயில்
வீரவஸந்தா

ரூ. 1-2
அபராதி

ரூ. 1.
வத்ஸகுமார்
ப்ரார்த்தனை
பிரதிக்ஞை
பெண் தர்மம்
உண்மைச் சித்திரம்
மனத்தாமரை
தபால் விநோதம்
இனிய முரசு
ஆண்டவனின் அருள்
இந்திரமோஹனா

அணா.12
பஷமாலிகா
ப்ரேமாச்ரமம்
நியாயமழை
அருணோதயம்
மனச்சாட்சி
குலதனம்
கருணை உள்ளம்
சந்திரகலாமாலை
தென்னாட்டு கல்யாண
முறைகள்

அணா 8.
உணர்த்த இதயம்
கான கலா
தூய உள்ளம்
ஸௌபாக்யவதி
ப்ரபஞ்சலீலை
வெற்றிப்பரிசு
ரோஜா மலர்
தைரியலக்ஷ்மி

வை. மு. ஸ்ரீ.
உதய சூரியன் 1.
பெண்மணிக்கனல் 1
இருளில் ஒளி 1.
தியாகபலி
ஜயந்திசிந்தனைகள்
கோதாஹ்ருதயம் 0

வை.மு. பத்மி
ரூ. 1 8
ஸ்ரீ க்ருஷ்ணார்ப்
பாலர் மோகினி
12 சிறு கதைகள்

சுத்தானந்த பாரதி
காந்தி கீர்த்தனம் 3

ப்ர.ப. அண்ண
ராசார்ய ஸ்வ
ஸ்ரீவிஷ்ணு
ஸஹஸ்ர
நாமஉரை 1-0
அபூர்வ
ராமாயணம் 1-8

JAGANMOHINI, owned and edited by V. M. KOTHAINAYAKI AMMAL is printed & published by V. M. PARTHASARATHY at the JaganMohini Press, 26, Car St, Triplicane, Madras 5.